# மின்நிலா

ஜூலை 6 , 2020





engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

## இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

## என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

## நன்றி.

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020

படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

மின்நிலா 006 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம்

சிறுதானிய கஞ்சி கீதா ரெங்கன் ரெஸிப்பி

ங்கா... சிறுகதை ....... ஜீவி

மெரீனாவில் சூரிய உதயம் பார்த்திருக்கிறீர்களா?

நிலா மேடை

பழையவரே புதியவராய்....

அபுரி :

சுவாரஸ்ய மனிதர்கள்

வெள்ளி வீடியோ

நினைவு நல்லதும், வாக்கினிலே இனிமையும்...

தீதும் நன்றும் பிறர் தர வாரா

மின்நிலா வாசகர் விமரிசனம்

அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

வாசிப்பு அனுபவம்: இரா. அரவிந்த்.

சுய அறிமுகம்: பானுமதி வெங்கடேஸ்வரன்

# சிறுதானிய கஞ்சி கீதா ரெங்கன் ரெஸிப்பி

எல்லோருக்கும் எங்கள் இனிய அன்பான வணக்கம். இன்று மிக மிக மிக சிம்பிளான அதே சமயம் ஒரு பேச்சுலர் ரெசிப்பி. என் மகனுக்குச் சொல்லிக் கொடுத்தது. சோசியல் டிஸ்டன்ஸ் இருந்தாலும் நம்ம பூஸார், தான் மாஸ்க் போட்டுக் கொண்டு கண்டிப்பாக வந்து எனக்கு எல்லாம் எடுத்துத் தருவதாக அன்புடன் சொன்னதால் (பாருங்க என்னா கடமை உணர்ச்சி!!!) அவரும் கூடவே இங்கு. அவரது செக் இல்லாமலா? எனவே மூவரும் கிச்சனுக்குள்.

இப்ப நேரா ரெசிப்பிக்குப் போகலாம். இதை அப்படியே கெட்டியாகவும் சாப்பிடலாம். அல்லது சுடுநீர் கலந்து நெகிழ்த்தியும் குடிக்கலாம். அல்லது செமிசாலிடாகவும் சாப்பிடலாம். ரஸம் டேஸ்ட் தான் கிட்டத்தட்ட. பொங்கலாகவும் செய்யலாம். அவனுக்குப் பல சமயங்களில் சாதம் தனியாக, ரசம் தனியாக என்று செய்ய நேரம் இருப்பதில்லை என்பதால் இப்படி முதலில் அரிசியில் சொல்லிக் கொடுத்தேன். அப்புறம் எல்லா தானியங்களிலும்.



## சிறு தானியக் கஞ்சி

நான் இங்கு கொடுத்திருக்கும் கப் அளவு பேக்கிங் அளவில் சொல்லப்படும் 1/2 கப். 1/2 கப் சிறு தானியம் (வரகு அல்லது சாமை) நான் இங்கு எடுத்திருப்பது புழுக்கிய வரகு. அதற்கு 2 டேபிள் ஸ்பூன் பாசிப்பருப்பு. 1 டீ ஸ்பூன் மிளகு, 1டீ ஸ்பூன் ஜீரகம். 1/2 டீஸ்பூன் மஞ்சள் பொடி, கொஞ்சம் கருகப்பிலை. 4 பூண்டுப்பற்கள், 1 எலுமிச்சை, 1 டீ ஸ்பூன் நெய், தேவையான உப்பு. பூண்டு சேர்க்காமல் என்றால் அதற்குப் பதில் 1 சின்ன கட்டி பெருங்காயம் அல்லது 1/2 டீஸ்பூன் பெருங்காயத் தூள், 1 ஸ்பூன் கடுகு

குக்கரில் நேரடியாகச் செய்வதென்றால் அதிலேயே தாளித்துச் செய்யலாம் அல்லது ஒரு பாத்திரத்தில் போட்டு குக்கரில் வைத்தும் செய்யலாம். ஒரு வாணலியில் 1ஸ்பூன் நெய் விட்டு அதில் கடுகு, ஜீரகம், மிளகு எல்லாம் போட்டு பொரிந்து வரும் போது கருகப்பிலை, நசுக்கிய பூண்டு பற்கள்(பூண்டு வேண்டாம் என்றால் பெருங்காயம்) மஞ்சள் பொடி, உப்பு எல்லாம் சேர்த்து ஒரு புறட்டு புறட்டி, அதில், கழுவி 20 நிமிடம் ஊற வைத்த சிறு தானியத்தையும், பருப்பையும் சேர்த்து 4 கப் தண்ணீர் விட்டு குக்கரை மூடி அல்லது பாத்திரத்தில் என்றால் பாத்திரத்தை குக்கரில் வைத்து 5, 6 விசில் வரும் வரை வேக வைத்து ப்ரெஷர் அடங்கியதும் வெளியில் எடுத்து எலுமிச்சை பிழிந்து கலந்தால் ரெடி. மற்ற குறிப்புகளை வெளியில் கொடுத்துள்ளேன்.

**3 செப்பரேட்டர் உள்ள குக்கர் என்றால் ஒரு பாத்திரத்தில் ப்ளெயின் சாதத்திற்கு அரிசி களைந்து வைத்துவிட்டு, மற்றொரு பாத்திரத்தில் என்ன காய் அன்று பயன் படுத்துகிறோமோ அக்காயைப் போட்டு உப்பு, காரம் மஞ்சள் பொடி போட்டு தாளித்து நன்றாக மிக்ஸ் செய்துவிட்டு, மற்றொரு பாத்திரத்தில் இன்றைய கஞ்சி/ரஸம் சாதம் பாக்ஸில் கொடுத்திருப்பது போல் போட்டு குக்கரில் செட் செய்து வைத்துவிட்டால் வெயிட்டும் போட்டு 20 நிமிடத்தில் ரெடியாகிவிடும்.**

காயை வெளியில் எடுத்து தேங்காய் சேர்க்கப் பிடித்தால் சேர்த்துக் கொள்ளலாம்.

பொரியல் அல்லாமல் கூட்டு என்றால் கூட்டிற்கான காய், பருப்பு சேர்ப்பதாக இருந்தால் பருப்பு எல்லாம் சேர்த்து) அதை ஒரு செப்பரேட்டரில் போட்டு தாளித்தும் போட்டு, உப்பு, மஞ்சள் பொடி, அப்புறம் அரைத்து விடுவதானால் அரைத்து விட்டுக் கலந்து வைத்துவிட்டால் ஒரே நேரத்தில் சாதம், பொரியல்/கூட்டு, ஒரு சாலிட் ப்ரேக்ஃபாஸ்ட் கஞ்சி அல்லது ரசம் ஸ்டைல் ஒரு பதார்த்தம் ரெடி. கூட்டிற்கு அவனுக்கு நான் பல வகைப் பொடிகள் கொடுத்திருப்பதால் அதைப் பயன்படுத்திக் கொள்வான். அரைத்துவிடுவது என்பது எல்லாம் நேரம் இருந்தால் மட்டுமே.

மகனுக்கு இது மிகவும் எளிதாக இருப்பதால் இப்படிச் சொல்லிக் கொடுத்ததைச் செய்து கொள்கிறான். குக்கர் வேலை செய்யும் சமயத்தில் காலேஜ் க்ளினிக்கிற்குக் கிளம்பும் வேலைகளை முடித்து விட சௌகர்யமாக இருக்கிறது என்றும் சொன்னான். அவன் இன்னும் நிறைய அவனாகவே செய்து கொள்கிறான். அந்த ரெசிப்பிஸ் எனக்கும் சொல்வான் ஆனால் எப்போதேனும். நேரம் கிடைப்பதுதான் அவனுக்குச் சிரமமாக இருக்கிறது.

இந்தக் கஞ்சிக்கு வேறு விதத்தில் செய்யலாம் என்று அவனுக்குச் சொல்லியதையும் இங்கு சொல்கிறேன்.

இதில் மிளகு பூண்டு என்று தாளிப்பதற்குப் பதில் கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயம், ஜீரகம் தாளித்தும் செய்யலாம்.

சிறு தானியத்திற்குப் பதில் அரிசி/பச்சரிசி நொய்/புழுங்கரிசி நொய்/ஓட்ஸ்/அவல்/ QUINOVA- என்று எது வேண்டுமானாலும் பேஸாகப் பயன்படுத்தலாம். நான் QUINOVA விலும் செய்தேன். அதைச் செய்யும் போது படம் எடுக்க முடியாமல் போனது.

பருப்பு எதுவும் இல்லாமலும் செய்யலாம். (கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தால் லைட்டாக இருக்கும்.)

தாளிப்பின் கூடவே கொஞ்சம் ரசப்பொடியும் கலந்து வேக வைக்கலாம்.

தாளித்து வதக்குவதுடன் தக்காளியும் சேர்த்து சும்மா லைட்டா வதக்கி சேர்த்துக் கொள்ளலாம்.

தாளிப்பிள் ஜீரகத்துடன் கொஞ்சம் கருஞ்சீரகம் சேர்த்து தாளிக்கலாம். சோம்பும் கூட கொஞ்சமாகத் தாளிக்கலாம். (நான் செய்த போது கருஞ்சீரகம் காலியாகி இருந்தது அதனால் போடவில்லை)

விருப்பம் இருந்தால், வீட்டில் வேப்பம் பூ ஸ்டாக் இருந்தால் அதையும் கொஞ்சம் நெய்யில் வறுத்து இதில் கலந்து சாப்பிடலாம். கூடவே கொஞ்சம் இஞ்சி அல்லது சுக்குப் பொடியும் கலந்து செய்யலாம்.

பிடித்தால் தாளிப்பில் சின்ன வெங்காயம் 4, 5 சேர்த்துக் கொள்ளலாம்.

இதோடு பீன்ஸ், காரட், பட்டாணி, காலிஃபளவர், கோஸ் என்று எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் சேர்த்தும் செய்யலாம். (மகன் அம்மா ஆல் இன் ஒன் என்று கேட்ட போது

**சொன்னது. பாண்டிச்சேரியில் இருந்தப்பவே நான் சென்னைக்கு வரும் சமயம் அவன் இப்படித்தான் சமைத்துக் கொள்வான்.)**


**இப்படி நம், ஏஞ்சல் சொல்லுவது போல் மானே தேனே என்று சேர்த்துச் செய்யலாம்.**

**எபி ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி சொல்லி மீண்டும் வேறு ஒரு திங்க வுடன் திங்க பதிவில் சந்திப்போம்!**



**ஆஆஆஆ! கஷ்டப்பட்டு சமைச்சதெல்லாம் இப்படி வெட்டுதே! இனிமேல் ஓவர் டு ஏஞ்சல் வந்து சொல்லுவாங்க இதுல யார் ஸ்காட்லான்ட் யார் லண்டன்னு!!!!**

பொருளடக்கம்


kayjee

# ங்கா... சிறுகதை ....... ஜீவி

**வா**னதி பட்டும் படாமலும்தான் பார்த்தாள்.

இருந்தாலும் கிரிஜாவிடமிருந்து பார்வையை அவளால் அகற்றிக் கொள்ள முடியவில்லை.'என்ன அழகு?.. என்ன வாளிப்பு?..' என்று திகைத்தாள்.

"என்னடி அப்படிப் பாக்கறே?" என்று லேசாக விலகியிருந்த புடவையின் மேல் பகுதியைச் சரிபடுத்திக் கொண்ட கிரிஜா புன்னகைத்தாள்.

"ஒண்ணுமிலேடி" என்று வெளிக்குச் சொன்னாலும் வானதிக்கு ஆச்சரியம் தான். எப்படி இப்படி?..

இவ்வளவுக்கும் கிரிஜாவுக்கு எட்டு வயசில் ஒரு பையன். எல்.கே.ஜி. படிக்கும் பெண். இருந்தும் எப்படி இப்படி ஒரு கட்டுக் குலையாத அழகு?.. ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணைப் பற்றித் தெரியாதா?... உயிர்ப்புள்ள இயற்கை; உயிரோட்டத்தின் செழுமை.

அதே நேரத்தில் தன்னைப் பற்றியும் அவளால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. கல்யாணம் ஆகி மூன்று வருஷம் இன்னும் முழுசாக முடியவில்லை.. அதற்குள்...

"என்னடி, யோசனை?.. எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறே?"

"ம்?.. என்ன கேட்டே?"

"சரியாப் போச்சு.." என்று வானதியின் கன்னத்தில் லேசாகத் தட்டினாள் கிரிஜா. "மெத்து மெத்துனு இருக்குடி உன் கன்னம்..

கிளி கொத்தாத பழம்ன்னு சொல்லுவாங்க.. அந்த மாதிரி கன்னம்டீ உனக்கு..."

"சீ.. ஆனாலும் நீ சுத்த மோசம்."

"என்ன, நானா, இல்லே, உன்னோட அவரா?"

"க்குங்.." என்று வானதி வெளிக்குச் சிணுங்கினாலும், நெஞ்சுக்கு கிரிஜா சொன்னது இனிப்பாகத் தான் இருந்தது.

நேற்று ராத்திரி தூங்குவதற்கு பதினொன்ரைக்கு மேலாகி விட்டது. போதாக்குறைக்கு அதிகாலை நாலு மணிக்கு அலாரம் வேறு அவன் வைத்ததைப் பார்த்து அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அப்பொழுதும் தன் கணவனைப் பார்த்து இதையேதான் சொன்னாள். 'ஆனாலும் நீங்க சுத்த மோசம்!

"என்னடி, இது?.. 'அவர்"ன்னு ஒரு வார்த்தைதான் சொன்னேன்; ஆகாசத்திலே பறக்கறையே?.. உன்னோட அவர் அப்படி என்னடி சொக்கு பொடி போட்டு வைச்சிருக்கார்?..சொல்லுடி, கண்ணு," என்று கிரிஜா, வானதியின் தாடையைப் பிடித்துக் கொண்டாள்.

வயசுப் பெண்களும் ஆண்களைப் போலவே தான். இரண்டு நெருங்கிய நண்பிகள் சேர்ந்து விட்டால் ஒருத்தருக்கொருத்தர் எந்தப் பகிர்தலுக்கும் பஞ்சமே இல்லையென்று சமயங்களில் போய்விடுகிறதுதான்.

"நான் சொன்னா நீயும் அந்த சொக்குப்பொடியை வாங்கி ஸ்டாக் வைச்சிண்டுவியா?" என்றாள் வானதி.

"தாராளமாய் செய்வேன். எங்கே கிடக்கும்ன்னு மட்டும் சொல்லு. உனக்கும் சேர்த்து ரெண்டு பாக்கெட் வாங்கித் தரேன்.."

"கடைலேலாம் வாங்கினா பழசா இருக்கும். அவ்வளவு எஃபெக்ட் இருக்காது. இதுக்கெல்லாம் ஹோம் பிரிப்பரேஷன் தான் லாயக்கு. தெரிஞ்சிதா?"

"நீ பாட்டுக்க சின்ன வெங்காயம் அஞ்சு கிலோ வாங்கி வெயில்லே உலர்த்தின்னு.. ஆரம்பிக்காதே.. நம்மாலேலாம் அந்த உலர்த்தி, இடிச்சு, பொடி பண்ணற விஷயமெல்லாம் ஆகாது. .. "

" பின்னே?.. கஷ்டப்படாம இந்த லோகத்திலே என்ன விஷயம்டீ சாத்தியப்படும்?.. சொல்லு.."

"ஜாலியான விஷயத்துக்கெல்லம் கஷ்டப்பட்டா அந்த த்ரில் போயிடும் எனக்கு. அதான் பாக்கறேன்.."

வானதி சிரித்தாள்.

"என்னடி, சிரிக்கறே?"

"ஒண்ணுமில்லே."

"என்ன ஒண்ணுமில்லே?"

'இவள் என்னிடம் கேட்கிறாளே?' என்று வானதி தனக்குள் நினைத்துக் கொண்டாள். ஒரு பையன்,ஒரு பெண்! அதற்கு அப்புறம் 'நாமிருவர்' ஸ்லோகன்! தொட்டால் ஒட்டிக்கொள்ளும்

என்கிற பயமில்லை. இருந்தும் இந்த கிரிஜா எப்படி இப்படிக் கட்டுக்குலையாமல் இருக்கிறாள்?..

வானதிக்கு ஒரே ஆச்சரியம். அவள் விஷயம்ன்னா சங்கோஜமே இல்லாமல் கேட்டு விடுகிறாளே, நாமும் கேட்டு விட்டால் என்ன என்று தோன்றியது. தொண்டைக்குழி வரை கூட வார்த்தை வந்து விட்டது. ஆனாலும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'என்னதான் நெருங்கிய தோழி என்றாலும் எப்படி இதைப் போய் வெளிப்படையாய் கேட்பது' என்று அவளுக்கு ஒரு தயக்கம்.

"கைக் குழந்தையை யாரு கிட்டே விட்டுட்டு வந்திருக்கே?" என்றாள் கிரிஜா.

"அம்மா ஊரிலேந்து வந்திருக்கா.. குழந்தை தூங்கிண்டு இருக்கா. எப்படியும் ஒன்னவர் ஆகும் அவ முழிச்சிக்க.. சித்தே பாத்துக்கோமா.. இதோ வந்திடறேன்னு ஏடிஎம்முக்கா வந்தேன்..." என்ற வானதி "நான் வரேன்.. கிரிஜா.." என்று கிளம்புவதற்குத் தயாரானாள்.

"ஒரு நிமிஷம்.." என்ற கிரிஜா, ஹால் பூஜை அலமாரிக் கதவைத் திறந்து அங்கிருந்த குங்குமச் சிமிழை எடுத்து வந்து வானதியிடம் நீட்டினாள்.

வானதி குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டிருந்த பொழுது.....

திடீரென்று வாசல் பக்கம் நிழலாடியது. வேலைக்கார அம்மாள் ப்ரீதாவை விட்டு விட்டுச் சென்றாள்.

"மம்மி..."என்று வாசலிலிருந்து கத்திக்கொண்டே ப்ரீதா ஓடிவந்து கிரிஜாவைக் கட்டிக் கொண்டாள். குழந்தை கொள்ளை அழகு. வாரி அணைத்துக் கொள்ளலாம் போலிருந்தது வானதிக்கு.

"நோ..நோ.." என்று தன் கழுத்தைக் கட்டிக்கொண்ட குழந்தையின் கைகளை விலக்கி விட்டாள் கிரிஜா. "ப்ரீதா! இப்படி மேலே விழுந்து புரளக்கூடாது. டோண்ட் பி நாட்டி..." என்று எல்.கே.ஜி. குழந்தையிடம் அவள் கடுகடுப்பது வானதிக்கு என்னவோ போலிருந்தது. பத்திரமாக பொத்தி வைத்திருப்பது போல தனது இடைக்கு மேல் பகுதியை அவள் சரிசெய்து கொண்டது விநோதமாக இருந்தது வானதிக்கு.

குழந்தையின் யூனிபாரத்தைக் கழட்டி, மடித்து வைத்து அதன் காலலம்பித் துடைத்துக் கூட்டி வந்தாள் கிரிஜா. 'நர்ஸரி ஸ்கூல்னு பேரு. மாசம் இவளுக்கு மட்டும் ஐநூறுக்கு மேலே அழறோம்.. என்ன பிரயோஜம்?.. நீட்னஸைப் பத்தி வீட்லேதான் எஜூகேட் பண்ண வேண்டியிருக்கு" என்று வானதியைப் பார்த்து புன்முறுவல் செய்தாள்.

"அதெல்லாம் சரி, கிரிஜா.. குழந்தை ஆசையோட அணைக்கறச்சே கையை விலக்கி விட்டையே?.. அந்த ஒரு நொடிலே அதோட முகம் சாம்பி, எதையோ இழந்துட்ட மாதிரி..."

"ஓ...ஓ...."என்று கண்களில் நீர் தளும்ப அடக்க முடியாமல் சிரித்தாள் கிரிஜா. "ஓ.. நீ என்ன சொன்னே?.. ப்ளீஸ் ரிபீட்..."

"என்ன சொன்னேன்?.. ஆசையோட அணைக்கறச்சே.. நீ விலக்கி விடறச்சே..."

"எஸ்.. தேர் தி பாயிண்ட் இஸ்...." என்றாள் கிரிஜா "ஆசையோட அணைக்கறச்சே விலக்கித்தான் விடணும்.. அனுமதிச்சா உடை கசங்கும்.. உடல் கசங்கும்..எதுவுமே கசங்கினா எனக்குப் பிடிக்காது..." என்றவளை வினோதமாகப் பார்த்தாள்,வானதி.

கிரிஜாவே தொடர்ந்தாள்:" ரமேஷும் ப்ரீதாவும், கைக்குழந்தைகளா இருக்கறச்சே, எங்கம்மா தாய்ப்பால் கொடுடீன்னு தலையா அடிச்சிண்டா... நா மசியலே.. எல்லாருக்குமே புட்டிப்பால் தான்! இவருக்குக் கூட குறைதான்! அதுக்காக நாம என்ன செய்ய முடியும்,வானதி?.. யூ ஸீ... எதை நாம பழகிண்டாலும், பழகிக்கலேன்னாலும் ஃபஸ்ட் ஆப் ஆல் படைப்பின் அழகை ஆராதிக்க நாம கத்துக்கணும்,வானதி!.. நீ என்ன நெனைக்கறே?... ஆம் ஐ கரெக்ட்?..."

கிரிஜாவுக்கு என்ன பதில் சொல்வது என்று வானதிக்குப் புரியவில்லை. ஆனால் கட்டுக் குலையாமல் இருக்கும் கிரிஜாவின் அழகின் ரகசியம் அவளுக்குப் புரிந்து விட்டது.

ஆரம்பத்திலிருந்தே இந்த ஜாக்கிரதை உணர்வு தனக்கு இல்லாமல் போய்விட்டதே.. 'தப்பு செய்துவிட்டோமோ' என்று நொந்து கொண்ட வானதி திரும்பக் கிடைக்காத ஏதோ ஒன்றை இழந்து விட்ட உணர்வில் வீடு திரும்பினாள்.

அன்று மாலை மணி ஆறரையிருக்கும்.

கணவன் இன்னும் வீடு திரும்பவில்லை. அம்மா கிச்சனில் இருந்தார்கள்.

குழந்தை லாவண்யா ஹாலில் கட்டியிருந்த தூளியில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

துணித் தூளி வானதியின் அம்மா ஏற்பாடு. குழந்தை பிறந்ததும் தொட்டில் கூடவே கூடாது என்று பாட்டி சொல்லி விட்டாள். இதான் குழந்தைக்கு ஆரோக்கியமானதாம். சின்னஞ்சிறு குழந்தையின் முதுகுப் பகுதியை அணைத்தபடி மிருதுவான அதன் எலும்புக்கு சுகமாக இருக்கும் என்று அனுபவப்பட்ட வயதான மனுஷி தீர்மானமாகச் சொல்லி விடவே குழந்தைக்கு மரத் தொட்டில் வாங்கும் எண்ணத்தைக் கைவிட்டாள் வானதி.

இருந்தாலும் புருஷனை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ளலாம் என்று "என்னங்க.. அம்மா சொல்றா.." என்று விஷயத்தைச் சொன்னாள்.

"அம்மா - ஆட்டுக்குட்டிலாம் இருக்கட்டும். நீ என்ன சொல்றே? அதைச் சொல்லு.." என்றான் ராகவன், கறாராக.

"அவ்வளவு அனுபவப்பட்டவா சொல்றா.. கேட்டுக்கலாமேனுன்னு தான்.." என்று அவள் சொன்ன போது, ராகவன் அவள் தோளைத் தொட்டான். தொட்டதே அழுத்தின மாதிரி இருந்தது. "இதோ பாரு.. நீ நினைக்கறது தான் இந்த வீட்லே நடக்கணும்ன்னு... அதான் எனக்கு சந்தோஷம்ன்னு உனக்கு நன்னாத் தெரியுமிலே?.. பின்னே, எதுக்கு இதுக்கெல்லாம் என்னைக் கேட்டுண்டு?.. நீ என்ன நினைக்கிறையோ அதை நடத்து, கண்ணா.. " என்று ஒரே வரியில் விஷயத்தை முடித்து விட்டான். அவன் அதைச் சொன்ன தோரணையே வானதிக்குக் கிறக்கமாக இருந்தது.

இந்த விஷயத்தில் எல்லாம் ராகவன் கில்லாடி. உப்பு பெறாத விஷயங்களுக்குக் கூட பாத்து பாத்து பெண்டாட்டியை குஷியா வைச்சிண்டிருந்தாதான், தான் குஷியாக இருக்கலாம்

என்பதை ஐந்தாவது வேத ஸ்லோகமாகவே மனனம் செய்து மனதில் பதித்து வைத்திருப்பவன் அவன்.

தூளியில் விட்டிருந்த குழந்தை லாவண்யா கையையும் காலையும் உதைத்துக் கொண்டாள். தூங்கிய குழந்தை விழித்துக் கொண்டது போலிருக்கிறது என்று அருகில் சென்று வானதி தூளியை லேசாக விலக்கிப் பார்த்தாள்.

முழுமதி போல் தாயின் முகம் கண்டதும் பொக்கைவாய்ச் சிரிப்புடன் கையைக் காலை ஆட்டிப் புரண்டது குழந்தை. தூளியை விட்டு வெளியே எடுக்க குழந்தை பண்ணிய ஆகாத்தியதைக் கண்டு அவள் நெஞ்சு பூரா பூரிப்பு பொங்கித் தளும்பியது.

அதற்கு மேலும் தூளியில் குழந்தையைத் தவிக்க விடாது, துணியை விலக்கித் தூக்கி உச்சி முகர்ந்தாள். அன்னையின் அணைப்பின் வெதுவெதுப்பில் சுகம் கண்ட குழந்தையின் கை பரபரத்தது. பிஞ்சு விரலால் மாராப்புப் பற்றியது.

"கொஞ்சம் பொறுடி.." என்று குழந்தையைக் கொஞ்சியபடி வானதி முந்தானை விலக்கி அணைத்துக் கொண்டாள். குழந்தை முட்டி மோதியது.


ஆஹா! ஆண்டவனின் படைப்பில் எத்தனை ரகசியம்? பிஞ்சு விரல்களால் பற்றி ஈறு கவ்வி குழந்தை ஷீரபானம் பருகுகையில்,பூமியே காலுக்கடியில் நழுவுகிற மாதிரி, கரகரவென்று நெஞ்சுக் கூட்டுக்குள் பிரவாகமாய் கங்கையே ஊற்றெடுக்கிற மாதிரி இருந்தது வானதிக்கு.

இத்தனை நாள் இயல்பாய் இருந்த செயல் இன்று மிகவும் அர்த்த பூர்வமாய் புலப்பட்டது. 'அழகுக்கல்ல, இது; குழந்தைக்கு

அமுது புகட்ட'என்று யாரோ கரும்பலகையில் சாக்பீஸால் எழுதி புரிய வைத்த மாதிரி, நிதர்சன நிஜத்தை உணர்வு பூர்வமாய் சுகித்த பரமானந்தத்தில் அவள் மெய் சிலிர்த்து விதிர்விதிர்த்தது. முக்கியமான முழுமுதல் உண்மையைப் புறக்கணித்து மூன்றாம்தர சிந்தனைக்கு இடம் கொடுத்தது எவ்வளவு பேதைமை என்று நாணினாள் அவள்.

கிரிஜாவிடம் காலையில் பேசியது நினைவில் புரண்டது.

வலது கையோடு ஒன்றி உழைக்கவே உருவான இடது கையை 'அதற்கு மட்டும்தான்' என்று நினைப்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்று எண்ணிக் கொண்டாள் வானதி.



பொருளடக்கம்

# மெரீனாவில் சூரிய உதயம் பார்த்திருக்கிறீர்களா?

**பானுமதி வெங்கடேஸ்வரன்:**

**மஞ்சள் பத்திரிகை, கருப்புப் பணம், நீலப்படம், சிவப்பு விளக்கு என்று மோசமான விஷயங்களை நிறங்களோடு சம்பந்தப் படுத்துகிறோமே, அந்த நிறங்கள் என்ன பாவம் செய்தன?**

**$ எப்படி முருகன் சுப்ரமணியன் ராமன் சீதை என்றெல்லாம் பெயர் வைக்கப்பட்டவர்கள், அந்தக் கடவுளர் பெயர்களுக்கு ஏற்ப வீரம்,கல்வி,பொருள்,ஈகை இவற்றில் அவர்கள் போல் சிறந்து இருப்பதில்லையோ, அது போலத்தான் ஆகு பெயர்களுக்குப் பின் பொருள் கண்டு பிடிப்பதும்! மஞ்சளால் பத்திரிக்கைக்கு கெட்ட பெயர் வந்தது என்றோ பத்திரிக்கையால் மஞ்சளுக்கு கெட்ட பெயர் என்பதோ சரியில்லை.**

**& மஞ்சள் நிலா, கருப்புத் தங்கம் (நிலக்கரி), நீலவானம், சிவப்பு முக்கோணம், செவ்விந்தியர், சிவப்புச் சூரியன், செஞ்சிலுவைச் சங்கம் இவை எல்லாம் நீங்க கேள்விப்பட்டதில்லையா!**

**மெரீனாவில் சூரிய உதயம் பார்த்திருக்கிறீர்களா?**

**$ நிறைய முறை!**
**பீச் அழுக்காக இருந்தபோதும் கூட !**
**S S Stamatis கரை தட்டி நின்ற 66 க்கும் முன்னிருந்த போதிருந்தே!**



& நான் நாகை 'ஸ்டார்' டாக்கீஸ்ல 'சந்திரோதயம்' பார்த்து ரசித்திருக்கிறேன். அதில் வருகின்ற தேஷ் ராகப் பாடலை அடிக்கடி ஹம் செய்வேன். (மெரீனா என்று ஒரு தியேட்டர் இருக்கா? சூரிய உதயம் என்று ஒரு படம் வந்ததா? என்று கேட்டு, கூகிளில் தேடினால் - சூர்யோதயம் என்று ஒரு படம் 1999 ஆம் வருடம் வந்திருக்கிறது என்று தெரிகிறது. இதுவரை கேள்விப்பட்டிராத சினிமா! கதைச்சுருக்கம் படித்தால் பயமா இருக்கு!)

கண்ணதாசன் பாடல்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த பாடல் எது? திரைப்பட பாடலைத்தவிர்த்து ரசித்த அவருடைய வேறு படைப்பு எது? அவருடைய சுய சரிதமான மனவாசம் எனக்கு பிடிக்கும்.

$ அர்த்தமுள்ள இந்துமதம் கூட.

# சரவணப் பொய்கையில் நீராடி.. இது கண்ணதாசனா என்று தெரியாது. திரை இசை நாட்டம் மிகக் குறைவு. (& சொல்கிறார் : கண்ணதாசன் பாடல்தான்) இது சுட்டி

கண்ணதாசன் சிறுகூடல்பட்டி உமையாம்பிகைத் துதியாக இயற்றிய பாக்கள் ரொம்பவும் பிடிக்கும்.
மனவாசத்தில் அவரது ஒளிவு மறைவில்லாத பாணி சில சமயங்களில் இது தேவைதானா என்ற வினாவை எழுப்பியதுண்டு.
அர்த்தமுள்ள இந்து மதம் நூலில் நல்லவர்களுக்கு காலக்கிரமத்தில் நல்லது மட்டுமே நடக்கும் என்ற

**உறுதியான நிலைப்பாடும் விதிமீது அதீத நம்பிக்கையும் வியக்க வைத்தது.**

**& இன்றைக்கு நான் கேட்டு ரசித்த பாடல் இது:**

**(இங்கே கிளிக்குக !!)**

**ஒரு நாள் இரவில்
கண் உறக்கம் பிடிக்கவில்லை
வருவான் கண்ணன் என
நினைத்தேன் மறக்கவில்லை**



**திரு நாள் தேடி தோழியர் கூடி
சென்றார் திரும்பவில்லை
தினையும் பனையாய் வளர்ந்தே
இரு விழிகள் அரும்பவில்லை**

**இரவில் உலவும் திருடன்
அவன் என்றார்
திருடாது ஒரு நாளும்
காதல் இல்லையென்றேன்
எனையே அவன் பால் கொடுத்தேன்
என் இறைவன்
திருடவில்லை!**

**கண்ணதாசன் எழுதிய புத்தகங்கள் என்றால் அர்த்தமுள்ள இந்து மதம் சில பாகங்கள் தவிர வேறு எதையும் படித்ததில்லை. ஆனால் அவர் குமுதத்தில் வாரம் ஒரு பக்கம் எழுதியவை எல்லாவற்றையும் படித்து ரசித்திருக்கிறேன்.**

**(இது புதன் பதிவா அல்லது வெள்ளி வீடியோ பதிவா என்று ஒரு சந்தேகம் உங்களுக்கு வந்தால், அது நியாயமே!)**

**பொருளடக்கம்**

# நிலா மேடை

**நம் வாசகர்களுடன் இரண்டு சந்தோஷ சமாச்சாரங்களைப் பகிர்ந்துகொள்கிறோம் :**

**ஒன்று : நம்முடைய ஆசிரியர் குழுவின் இராஜ அச்சு, (king pin) ஸ்ரீராம் அவர்கள் எழுதிய " காசி பயணக் கட்டுரை" கிண்டில் புத்தகமாக அமேசான் கிண்டில் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.**

**அமேசான் கிண்டில் அன்லிமிடட் உறுப்பினர்கள், இந்தப் புத்தகத்தை இலவசமாக பதிவிறக்கம் செய்து, படிக்கலாம்.**

**அமேசான் கிண்டில் அன்லிமிடட் உறுப்பினர் அல்லாதவர்கள், இந்தப் புத்தகத்தை இந்திய ரூபாய் நூறு செலுத்தி, பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

**இந்த கிண்டில் புத்தக வெளியீடு என்பதில் பல சிக்கலான படிகள் உள்ளன. அந்தப் படிகளில், என்னைக் கையைப் பிடித்து ஜாக்கிரதையாக வழி நடத்தி, புத்தகப் பதிவேற்றம்**

**என்னும் தெய்வத்தை தரிசனம் செய்யவைத்த நம் நண்பர்** வெங்கட் நாகராஜ் **அவர்களுக்கு நானும் ஸ்ரீராமும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.**

**இது ஸ்ரீராமின் காசி பயண அனுபவப் புத்தகத்தின் இந்தியப் பதிப்புக்கு சுட்டி :**

காசிக்குப் போகும் சம்சாரி




## அமெரிக்கா :

US (Amazon.com) LINK

**இந்த விவரங்களை உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து, புத்தகத்தைப் படிக்கச் சொல்லுங்கள்.**

==============================

**இரண்டாவது சந்தோஷ சமாச்சாரம் :**
**அனுபவ பாடங்கள் என்ற தலைப்பில், அடியேன் (!) எழுதிய புத்தகம் இன்று முதல் உலகெங்கிலும் அமேசான்**

கிண்டிலில் கிடைக்கும்.

**லிங்க் :** அனுபவ பாடங்கள்




பொருளடக்கம்

# பழையவரே புதியவராய்....

## விக்கிரமாதித்தக் கேள்வி!

நெருங்கியவர்களிடையே அல்லது நட்புகளிடையே உங்கள் அதிருப்தியை எப்படி காட்டுவீர்கள்? எதிர்பாராமல் காலை வாரினார் என் ஆஸ்தான ஆட்டோக்காரர்!

உறவுகளிடையேயோ, நட்புகளிடையேயோ கருத்து வேறுபாடுகள் சகஜம். ஆனால் அவற்றை ஒன்று சகித்துக்கொள்ள வேண்டும், இல்லை மென்மையாகச் சொல்ல வேண்டும். அதே போல அவற்றை எதிர்கொள்பவர்களும் எதிராளியின் நிலையைப் புரிந்து

கொள்ளவேண்டும். அவர் முற்றிலும் நம்மை வெறுப்பவரா? நம் மீது எப்போதும் கோபமாகவே உள்ளவரா? இதை எல்லாம் யோசித்தே அப்போதைய அவரின் வெளிப்பாடுகளை எதிர்கொள்ளவேண்டும். இது என் வ(ப)ழக்கம்.

குணம் நாடி குற்றமும் நாடி....

நெருங்கிய உறவுகளுக்குள்ளே கூட எனக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு சரி செய்து கொண்டிருக்கிறேன். அவர்களின் இது மாதிரியான தற்காலிக வெளிப்பாடுகளை விட, பொதுவான நிலையைத்தான் கருத்தில் கொள்வேன்.

என் ஆட்டோக்காரர் என்ன செய்தாரென்றால்,

இந்த லாக்டவுன் காலத்தில் செலவானாலும், பதட்டம் இன்றியும், பாதுகாப்பாகவும் அலுவலகம் சென்றுவர அவரை ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றும் அவரையே கேட்டு அதைக் கொடுத்து வந்தேன்.

இடையில் அவர் பேத்திக்கு திருமணம் வர, அவர் ஒரு பெரும் தொகை என்னிடம் கடன் எதிர்பார்த்திருந்தார் போல. மறைமுகமாக சொல்லவும் செய்தார். ஏற்கெனவே அவருக்கு நான் அவ்வப்போது உதவியது வளர்ந்து ஓரளவு பெரிய தொகை ஒன்று , அவரால் அது தரப்படாமல் இருந்ததைச் சுட்டிக் காட்டினேன். மௌனமானார். காலை அலுவலகம் சென்று விட்டோம்.

போச்!

பழையவரும்



வீடு திரும்ப வேண்டும். திடீரென அவர் வரவில்லை. போனை எடுப்பதையும் தவிர்த்து விட்டார். அவர் போனில் கோளாறு என்று நான் மறுபடி மறுபடி முயற்சிக்க, (அப்படி முன்னர் நடந்திருக்கிறது) அப்புறம் பணிக்குச் செல்லவேண்டிய நேரம் நெருங்கி, வேறொரு தெரிந்த ஆட்டோக்காரரை அவசரம் அவசரமாக வரவழைத்து அதில் சென்றேன்.

## புதியவரும்!



பின்னர் தெரிந்தது, இவர்களிடம் அவர் நான் பணம் குறைவாய்த் தருவதாய்ச் சொல்லி இருக்கிறார் என்று. இவர்களுக்கும் அவர் என்னிடம் கடன் பட்டிருப்பது தெரியும், அவரை நான் எப்படி நடத்துவேன் என்பதும் தெரியும் என்பதால் அவர்கள் இவருக்கு அறிவுரை கூறியதோடு, இவ்வளவு பழகி விட்டு இந்த மாதிரி நெருக்கடியான சமயங்களில் திடீரென காலை வாருவது சரியில்லை என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்குமே... அன்று பார்த்து ஊபர், வோலா சேவைகள் திறந்துவிடப்பட, என் கஷ்டம் தீர்ந்ததோடு, செலவும் கம்மியாகவே ஆனது.

மறுபடி முதல்வர் கம்ப்ளீட் லாக்டவுன் என்றார். இந்த வாடகைக் கார்கள் வராது. என்ன செய்ய?

எங்கள் ஏரியாவிலிருந்து மூன்று பேர்கள், உறவு வட்டத்தின் ஏரியாவிலிருந்து ஒருவர், பழைய நட்பு வட்ட ஆட்டோக்காரர்களில் இருவர் என்று தெரிவு செய்தேன். கைவசம் ஆப்ஷன் நிறைய இருந்தது!

இப்போது நான் சென்றுவர என் ஐ டி யும், அலுவலகத்தில் கொடுத்த சான்றிதழும் கையில் வைத்திருக்க வேண்டும். ஆனால் அது ஆஸ்தானத்திடம் இருந்தது. பிரிந்த கடைசி நாளில் அவர் ஆட்டோவில் விட்டிருந்தேன். ஓரிருமுறை நண்பர்கள் வாயிலாகக் கேட்டும் இதோ அதோ என்றிருந்தார்.

கிட்டத்தட்ட 15 நாட்கள் கடந்துவிட்டிருந்த நிலையில் அவருக்கே போன் செய்தேன். இந்த முறை எடுத்தார். என் சான்றிதழ்களை உடனே தரச் சொல்லிக் கேட்டேன். மெதுவாய்ப் பேசினார். அவ்வளவு நாட்கள் பழகியவர் புதிதாய் பேசுபவர் போல தயங்கித் தயங்கிப் பேசினார்.

சான்றிதழை தருவதாக முதலில் சொன்னவர், இரண்டாவது வரியிலேயே தானே வருவதாகச் சொன்னார். 'நீங்களா? மறுபடி காலை வாரினால் என்ன செய்ய... சான்றிதழை கொடுங்கள். நான் இரண்டு மூன்று ஆட்டோக்காரர்கள் ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்று சொன்னேன். 'இல்லை, மறுபடி அப்படி நடக்காது' என்று சொன்னார். தானே வருவதாகச் சொன்னார்.

கொஞ்சம் யோசனைகளுக்குப் பின் கூட்டிக்கழித்துப் பார்த்து ஒப்புக்கொண்டேன். தெரியாத தேவதையை விட தெரிந்த டெவில் மேல்! கொடுத்த பணத்தை முள்ளின் மீது

விழுந்த சேலையாய் திருப்பி எடுக்க வேண்டும்! போக்குவரத்துக் காவலர்களை சமாளிக்க புதிய ஓட்டுநர்களைவிட பழைய ஓட்டுநர் சிலாக்கியம். என் மற்ற பயணத் தேவைகளுக்கும் இவர் சரிப்பட்டு வருவார். குடும்பத்தில் ஒருவர் போல பழகியவராச்சே!

மறுபடி வந்து சவாரி செல்கையில் கடந்த அந்தப் பதினைந்து நாட்களில் அவர் சவாரி எதுவும் கிடைக்காமல் அன்றாடச் செலவுகளுக்குக் கஷ்டப்பட்டதையும் ஒளிக்காமல் என்னிடம் சொன்னார்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல அவரின் கடன் கிடைக்காத ஆத்திரத்தை புரிந்து கொண்டு, அவரின் இந்த அதீத நடவடிக்கையை மறந்து, மறுபடி அழைத்துக் கொண்டேன். சுயநலமும் கலந்துதான் இருக்கிறது என்பது மேற்சொன்ன குறிப்புகளிலும் புரிந்திருக்கும்…

என்ன நான் சொல்வது…

---

இந்த லாக்டவுன் காலத்தில் சாயங்கால வேளைகளில் நாலு முழ நாக்கு ஓவர்டைம் பார்க்கிறது! என் மகன்களும் அதில் ஆர்வமாய் இருப்பதால் பாஸ்-இளையவன் கூட்டுத் தயாரிப்பில் உருவான சில மாலை நேர நொறுக்ஸ்! இன்னும் சில உண்டு.. கார போளி, ப்ரெட் சில்லி ப்ரை, ப்ரெட் உப்புமா, சப்பாத்தி, பனீர் பட்டர் மசாலா…!!



## பொருளடக்கம்

# அபுரி :

சுஜாதாவின் வார்த்தைகளிலிருந்து நான் 'அபுரி' யைத் திருடி இருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். கடந்த வெள்ளிக்கிழமை பதிவில் ஜீவி ஸார் கூடக் கேட்டிருந்தார். அது வந்த சுஜாதாவின் கதையின் பக்கங்களைக் கொடுத்திருக்கிறேன். எனக்கு மட்டுமல்லாமல் எங்கள் வீட்டுப் பூச்சிகளுக்குக் கூட சுஜாதாவின் விஞ்ஞானக் கதைகள் (கம்பியூட்டரே ஒரு கதை சொல்லு) பிடித்து விட்டது போல. ரொம்ப "உள்வாங்கி" படித்திருக்கின்றன!

## அந்தப் புத்தகத்தின் சுஜாதா முன்னுரை

# முன்னுரை


வாசகர்களைத் தயார்படுத்த சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். விஞ்ஞானக் கதை என்பது வேறு ஜாதி. இந்தக் கதைகளை உணர்ந்து கொள்ளக் கொஞ்சம் சிந்தனையை நீங்கள் கூர்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். மற்றொரு காலத்தில் மற்றொரு சூழ்நிலையில் கதைகள் நடைபெற்றாலும் நாம் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய உணர்ச்சிகளையும் அவை சொல்லும். மெலிதான சித்தாந்த, தத்துவப் பின்னணிகளும் தென்படும். கதைகளில் சொல்லப்படும் எதிர்காலங்கள் சாத்தியக் கூறுகளே. அவைகளில் 'சில பயமளிக்கும். சில விநோதமாக இருக்கும். சில சந்தோஷம் தரும்...

'ஆத்மா' 'நித்யா' என்கிற இரு பெயர்களும் சில கதைகளில் திரும்பத் திரும்ப வந்தாலும் ஒவ்வொரு கதையிலும் அவர்கள் வெவ்வேறு மனிதர்களே.

முக்கியமாக "தேவன் வருகை" வாசகர்களிடமிருந்து ஆழ்ந்த நோக்கை அதிகம் எதிர்பார்க்கிறது.

—சுஜாதா

**ஒரு கதையில் அபுரி வரும் இடம்! முக்கியக்குறிப்பு : வலது பக்கத்தை முதலிலும், இடது பக்கத்தை அடுத்தும் படிக்க வேண்டும்!**



"அப்படி இல்லே. 'பெண்ணே, உன் பெயர் என்ன சொல்,' பார்க்கலாம்?"

"பெண்ணே ஆத்மா!"

"இன்னைக்குப் பாடம் போதும்!"

இருந்தும் அவர்களிடம் கற்றுக் கொள்ளும் விருப்பம் இருந்ததால், ஆம் இருந்ததால் அவர்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்... [illegible] வரிடம் நான் பெருமையுடன் இரண்டு மாணவர்களை சேர்த்ததைச் சொல்லிக் கொண்டேன். அவர் இந்த [illegible] நான் தப்பித்ததைச் சொன்னார். "சமயம் இருந்தால் ஒரு முறை வகுப்புக்கு வந்து பார்க்கிறேன்" என்றார். [illegible] நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று பழந்தமிழ் கற்றுக் கொள்வது. சமயமில்லை...

உலக ஒற்றுமை விழாவில் எல்லோரும் [illegible] ஆழ்ந்த சோமம் பருகி முட்டாள் தனமாக 'விட்டிபோவிஷன்' என்று சொல்லப்பட்ட கேளிக்கைகளில் ஆழ்ந்த தினத்திலும் அவ்விருவரும் தமிழ்ப் பாடம் கற்றுக் கொள்ள வந்தது எனக்கு வியப்பும் ஆனந்தமும் கண்ணீரும் தந்தது. "என் செல்வங்களா! உங்கள் மூலம் கன்னித் தமிழ் மறுபடியும் உயிர் பெறுகிறது. நீங்கள் என்னிடம் பயின்று சென்று இன்னும் இன்னும் தமிழ் பரப்புங்கள். [illegible] காலத்துக்குப் பின் இந்த வெட்டப்பட்ட மரம் மறுபடியும் துளிர்த்து, இலை விட்டுப் பூத்துக் காய்த்துக் கனிந்து மறுபடியும் விதைகள் பரப்பிச் செழித்துக் கொழிக்க வழி அமையுங்கள்" என்றேன்.

அபுரி" என்றார்கள்.

இருந்தும் அவர்கள் 'அபுரி'கள் குறைந்து கொண்டே வந்தன. இருவரும் சாதாரணமான தினசரி உரையாடல்களைத் தமிழில் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். [illegible] கொஞ்சமாகத் திருத்தி வந்தது.

சுஜாதா 621

"நடு அலிக் நாகோவா!" என்றேன்.

அந்தப் பெண் தலை ஆட்டி, "இல்த்யா! தோவ் சர்க் விக் புரிலகோ விக் த்யா?"

"அள தமிள் சர்க்?"

"ஆ!"

எனக்குத் தெளிவு வந்தது. இருவரும் பழைய தமிழில் எழுதிப் பேசும் வரைக்கும் கற்றுக் கொள்ள விரும்புகிறார்களாம்! அதற்குள் அவர்களை இலக்கியத்தில் ஈடுபடுத்தி விடலாம்...

இருவரும் இந்தக் காலத்து இளைய சமுதாயத்தினர். வேறு எவ்வளவோ வியப்புக்கள் இந்த விஞ்ஞான யுகத்தில் அவர்களுக்கு இருந்தும் அவர்கள் ஆர்வமாகவே பயின்றார்கள். தினம் தவறாமல் வகுப்புக்கு வந்தார்கள். சற்று வேகமாகவே கற்றுக்கொள்ளும் ஆசை இருந்தது அவர்களுக்கு. வகுப்பு நடந்த ஒரு மணி நேரம் முழுவதும் பழந் தமிழில் தான் பேச வேண்டும் என்று கட்டாயப்படுத்தினேன். விநோதமான விளைவுகள்.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"நித்யா!"

"உன் பெயர் சொல்லக் கூடாது நித்யா. உன் பெயர் என்ன என்ற வாக்கியத்தைச் சொல்லு!"

"அபுரி!"

"'அபுரி' என்று சொல்லக்கூடாது. எனக்குப் புரியவில்லை என்று சொல்ல வேண்டும்!"

"அபுரி!"

நான் தலையில் அடித்துக்கொண்டு, "ஆத்மா, நீ இங்கு வா. நீ நித்யாவைக் கேள், 'உன் பெயர் என்ன?' என்று."

"ஆத்மா!"

**இதிலேயே பிற்காலத்தைய சிதிலடமடைந்த தமிழாய் சுஜாதா உருவகப் படுத்தி இருப்பது..! அது சரி... இந்தக் கதையைப் படித்த ஞாபகம் இருக்கிறதா?**

"நித்யா, நீ இன்று நலமா?"

"நலம் ஆத்மா...நம் ஆசிரியர் நலமா எனக் கேட்கலாமா?"

இருவரும்: "ஆசிரியரே, நலமா?"

"நலம். என் தமிழ்ச் செல்வங்களே, நலம்!"

"இன்றைய பாடம் என்ன?"

"வியங்கோள் வினைமுற்று...

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்..."

"இரந்தும் என்றால் என்ன ஆசிரியரே?"

"பிச்சை எடுத்தல். இருபதாம் நூற்றாண்டுவரை மக்களில் பலர் பிச்சை எடுத்து வாழ வேண்டியிருந்தது. அந்தச் சமுதாயத்தை அமைத்த இறைவன் நாசமாகி விடட்டும் என்று கூறுகிறார் வள்ளுவர்."

"இறைவன் என்றால் யார்?"

"உலகைப் படைத்தவன்!"

"உலகை ஒருவன் படைத்தானா?"

"அப்படித்தான் நாம் இன்றும் நம்பவேண்டும்!"

"உலகியற்றியான் என்று ஏன் சொல்லவேண்டும்? உலகியற்றியாள் என்று ஏன் சொல்லவில்லை!" என்றாள் நித்யா.

"அந்தக் காலத்தில் பெண்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக நம்பினார்கள்..."

"என் மோச, என் றை மோச!"

"நித்யா! புதுத் தமிழில் பேசக் கூடாது என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன்."

# பேஸ்புக் பக்கம்

## அதற்கு வந்த கமெண்ட்ஸுடன்!

**Sriram Balasubramaniam**
June 27, 2015 at 8:37 PM ·

சென்னை மக்களைப்
பார்க்கும் ஆவல்
மழையை விட
வெயிலுக்குத்தான்
அதிகம் இருக்கிறது.

மழை வெல்லும்
தருணங்களும் உண்டு.

ஆனால்
மயங்கிச் சாரல்
மெல்ல வெளிப்படும் தருணம்
மடக்கித் தள்ளிச்
சென்று விடுகிறது காற்று.

மண் நனையும் முன்
காணாமல் போய்விடுகிறது
மழை மேகம்,
தேர்தல் முடிந்ததும்
தொகுதியிலிருந்து காணாமல் போகும்
வேட்பாளரைப்போல!





Gurumoorthy Subramanian இந்த பதிவுக்கும் அனுஷ்காவுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று ஒரு டிஸ்கி போட்ருக்கலாம் சார் 🙂
4
Like · Reply · 5y

Sriram Balasubramaniam அவங்க மழைல நனையறாங்க ஸார்! மழை பற்றித்தானே பேச்சு!
3
Like · Reply · 5y

Gurumoorthy Subramanian இல்லை மழையில் நனையும் மங்கையை பற்றியும் பேசுவோம் நாங்க 🙂
3
Like · Reply · 5y

Sriram Balasubramaniam ஹிஹி... மங்கையைப் பற்றி நீங்க பேசுங்க. கேக்கறேன். இப்போ நான் மழை பற்றிப் பேசியதை நீங்க கேக்கவில்லையா?
3
Like · Reply · 5y

Gurumoorthy Subramanian ஒ அருமை சார் எப்போதுமே மழை அற்புதமானது அதை எப்படி சொன்னாலும் நீங்கள் சொல்லிய விதம் அருமை..
3
Like · Reply · 5y

K G Gouthaman யாரோ ஜொள்ளு மழையில் நனைகிறார்கள் .....
6



இந்த வாரம் கொஞ்சம் சுருக்கமாக முடித்திருப்பதாய் நினைத்துக் கொள்கிறேன்!

பொருளடக்கம்

# சுவாரஸ்ய மனிதர்கள்

ஊரையும் சொல்லவில்லை, பேரையும் சொல்லவேண்டாம். என் வாழ்வில் நான் சந்தித்த சில சுவாரசியமான நபர்களைப் பற்றி சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஆசை. இவர் என் தூரத்து அல்ல சற்றே நெருங்கின உறவினர்தான்.

***

ஆறு பேர் தொள்ளாயிரத்துநாலு சீட்டுக்கச்சேரி மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

" வெட்டு" என்று சொல்லிவிட்டுஅது ஒரு மகா அற்பமான துருப்பு ஏழாம் மந்து வைத்து வெட்டினார் இரண்டாவது ஆட்டக்காரர். (அது என்ன ஏழாம் மந்து ? தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த வார்த்தைப் பிரயோகம் பிரசித்தம். சிலர் ஏழாம் பந்து என்றும் சொல்வார்கள். 904 ஆட்டத்தில் மகா மட்டமான சீட்டு ஏழாம் நம்பர் தான். அதற்கு கீழ் நிலையில் வேறு சீட்டு கிடையாது.

தன் கட்சி பிடி சீட்டை வெட்டியவரைப் பார்த்து ஒரு ஏளனப் பார்வையை வீசி விட்டு துருப்பு எட்டை பளார் என்று அறைந்து வீசி, " மேல் வெட்டு" என்றார் என் கட்சிக் காரர்.

அதற்கு மேல் ஒரு வெட்டு விழுந்தது அடுத்தவரிடமிருந்து . ராணி சீட்டை வைத்து வெட்டினவர் " female வெட்டு " என்றவுடன் சபையில் ஒரே கலகலப்பு.

சைக்கிள் கற்றுக் கொள்பவர் தடுமாறி கீழே விழப்போனவர் சமாளித்துக் கொண்டு எழுந்தார். அவருடைய நாடா அண்டர்வேர் அனைவர் கண்ணிலும் பட்டதை அவர்

**கவனிக்கவில்லை. தான் சாமர்த்தியமாக சமாளித்த சந்தோஷத்தில் " நம்ம சாமர்த்தியம் எப்படி ? " என்று நண்பர்களைக் கேட்டார்.**

**"நாங்க அதை சாமர்த்தியம் னு சொல்றதில்ல. பட்டா பட்டி ன்னு சொல்வோம்."**

***

**அவருடைய டயரி டேபிளில் கிடந்தது. ஒரு பக்கத்தைத் திருப்பி என்னிடம் கொடுத்து " படிச்சுப் பார் " என்றார் அவர்.**

**" key 3 இன்றைக்கும் காணவில்லை."**
**" key 3 இன்னிக்கு ஒரே பளபளா "**

**இந்த ரீதியில் நிறைய பதிவுகள்.**

**" key 3 யாருடையது? " என் கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. பிற்பாடு தெரிந்தது key 3 மூணாம் வீட்டுக்கு சொந்தமானது. வயசு 20. பெயர் சாவித்ரி.**

===

**" என்ன உங்க பள்ளிக்கூடத்தில் ஒரே ஒரு பையன் தான் பத்தாங்கிளாஸ் பாசாமே ?"**

**" ஆமா சார். எப்பிடி பாஸ் பண்ணான் என்று எங்க எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம்."**

====

**இதில் அவர் சம்பந்தப்பட்ட என் சில அனுபவங்கள்.**

**இதையெல்லாம் பார்த்து அவர் வெறும் தமாஷ் பேர்வழி என்று நினைத்துவிட வேண்டாம். அவர் பட்ட மேற்படிப்பு**

படித்த அற்புதமான ஆசிரியர். மாணவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர் . மிகப் பெரும் ரசிகர். எல்லாருடனும் அன்பாகவும் உரிமையாகவும் பழகுவார். கைத்தொழில் திறன் மிக்கவர். சீட்டுக் கட்டு மாஜிக் முதல் பல பல வேடிக்கைகள் செய்து காட்டுவதில் கில்லாடி. சிறந்த புகைப்பட நிபுணர்.

எனக்கு தரமான மற்றும் சுவாரசியமான ஆங்கில நாவல்கள் படிக்க வழி காட்டியவர். கிளாசிக் மற்றும் லைட் ரீடிங் வகையில் எல்லா நல்ல எழுத்துக் களையும் ரசித்துப் படிப்பவர்.

**

" என்ன ஸ்வாமி , தர்ப்பணம் ஆரம்பிக்கலாமா ?"

" முதல்ல உபநயனம் முடிச்சுட்டு வரேன் " என்றவாறு பூணூலை எடுத்து அணிந்துகொண்டு தயாராகிறார். !
ஆண்டவன் அவரை எங்களுடன் நெடுநாட்கள் இருக்க அனுக்ரஹிக்கவில்லை.

***



பொருளடக்கம்

பாலில் விழுந்த பழங்களை போலே பருவம் உருவம் நிறைந்தவள் நீயே

# வெள்ளி வீடியோ

**சென்ற வாரம் பிறந்த நாள் கொண்டாடிய எங்கள் பிளாக் தளத்துக்கு ஆடியோவிலோ, விடீயோவிலோ வாழ்த்துச் சொல்லலாமே என்று பானு அக்கா நண்பர்களை அழைத்திருந்தார். அதன்பேரில் நம் தளத்துக்கு வாழ்த்துச் சொல்லி இருக்கும் நண்பர்களின் காணொளி முதலில்...**

**இங்கும் வாழ்த்துச் சொன்ன அனைவருக்கும் நன்றி. யோசனை சொன்ன பானு அக்காவுக்கும் நன்றி.**

**<u>சுட்டி இது</u>**

**நேயர் விருப்பம் :**
**சில சர்ச்சைகளில் சிக்கிய படம் 1980 இல் வெளியான ஒரு தலை ராகம். ராஜேந்தர் இயக்கி இருந்தாலும், தயாரிப்புக்கு உதவியதால், இப்ராஹிம் பெயர்தான் போடப்பட்டது. தயாரிப்பாளரின் நிபந்தனை அது! இசையிலும் அப்படியே குழப்பம் நிலவினாலும் AA ராஜ் அப்புறம் காணாமல் போனார்.**


**பாடல்கள் சூப்பர் ஹிட்டானது. இதில் 'அந்த அறப்'பாடலைப் பாடியபின் தான் டி எம் எஸ் தனது மார்க்கெட்டை இழந்தார் என்று சொல்பவர் உண்டு. இந்த நெகட்டிவ் வார்த்தைப் பிரயோகங்களை பற்றி முன்னரே நிறைய எழுதி, வாசித்திருக்கிறோம். டி ஆர் ஆர், TMS க்கு கிட்டத்தட்ட இது போன்ற பாடல்களையே பின்னரும் பாடக்கொடுத்தார்!**

**நெல்லைத்தமிழனின் விருப்பத்தில் இன்று வாசமில்லா மலரிது பாடல். எஸ் பி பி குரலில் ராஜேந்தர் எழுதி இசை அமைத்த பாடல். கிடார் இல்லாமலேயே சங்கர் பாடுகிறார் வாயசைக்கிறார் பாருங்கள்! <<<< சுட்டி**

## இனி என் விருப்பம்!

**வெளிவந்த ஆண்டு 1961. முதன்முதலில் கிரிக்கெட் மேட்ச் நடக்கும்போது அதை எடுத்து படத்தில் இணைத்தது, முதன்முதலில் ஜம்மு காஷ்மீரில் எடுக்கப்பட்ட தமிழ்ப்படம். சித்ராலயாவின் முதல் படம். இப்படிப் பல சிறப்புகள் தேன் நிலவு படத்துக்கு.**

**கண்ணதாசன் பாடல்களுக்கு ஏ எம் ராஜா இசை. அத்தனை பாடல்களும் தேன் போன்ற பாடல்கள். படம் பாக்ஸ் ஆபீஸ் ஹிட்.**



இந்தப் படத்தின் பாடல் காட்சி ஒன்றில் (நிலவும் மலரும் ஆடுது) வைஜயந்திமாலா கிட்டத்தட்ட ஏரியில் மூழ்கி விட்டாராம். கேமிராமேன் காப்பாற்றி இருக்கிறார்.

சின்னச் சின்ன கண்ணிலே, காலையும் நீயே மாலையும் நீயே, நிலவும் மலரும் ஆடுது, பாட்டுப் பாட வா, மலரே மலரே தெரியாதா போன்ற இனிமையான பாடல்கள் நிறைந்த படம்.




கதாநாயகியை நாயகனுக்குப் பிடித்து
விட்டது. ரசிகர்களுக்குத் தெரியும் இவர்கள் மோதலில்
ஆரம்பித்து காதலிக்கப் போகிறார்கள் என்பது... காட்சியை
எப்படி வைபபது? ஸ்ரீதருக்கா தெரியாது? இளமை
துள்ளத்துள்ள காட்சி வைக்க ரொம்ப மெனக்கெட்டிருக்க
மாட்டார். காதல் மன்னன் இருக்க கவலை

**எதற்கு? கீரவாணி ராகத்தில் ஏ எம் ராஜா இசை அமைத்து, பாடி அசத்தி விட்டார்.**

பாட்டு பாடவா பார்த்து பேசவா
பாடம் சொல்லவா பறந்து செல்லவா
பால் நிலாவை போல வந்த பாவை அல்லவா
நானும் பாதை தேடி ஓடி வந்த காளை அல்லவா

மேகவண்ணம் போல மின்னும் ஆடையினாலே
மலை மேனியெல்லாம் மூடுதம்மா நாணத்தினாலே
மேகவண்ணம் போல மின்னும் ஆடையினாலே
மலை மேனியெல்லாம் மூடுதம்மா நாணத்தினாலே
பக்கமாக வந்த பின்னும் வெட்கம் ஆகுமா
இங்கே பார்வையோடு பார்வை சேர தூது வேண்டுமா
பக்கமாக வந்த பின்னும் வெட்கம் ஆகுமா
இங்கே பார்வையோடு பார்வை சேர தூது வேண்டுமா
மாலை அல்லவா நல்ல நேரம் அல்லவா
இன்னும் வானம் பார்த்த பூமி போல வாழலாகுமா

அங்கமெல்லாம் தங்கமான மங்கையை போலே
நதி அன்னநடை போடுதம்மா பூமியின் மேலே
அங்கமெல்லாம் தங்கமான மங்கையை போலே
நதி அன்னநடை போடுதம்மா பூமியின் மேலே
கண்ணிறைந்த காதலனை காணவில்லையா
இந்த காதலிக்கு தேன் நிலவில் ஆசை இல்லையா
கண்ணிறைந்த காதலனை காணவில்லையா
இந்த காதலிக்கு தேன் நிலவில் ஆசை இல்லையா
காதல் தோன்றுமா இன்னும் காலம் போகுமா
இல்லை காத்து காத்து நின்றது தான் மீதமாகுமா

சுட்டி இங்கே

ஹம்சானந்தி ராகத்தில் அமைந்த ஒரு பாடல். இனிமையான காதல் பாடல். ஏ எம் ராஜாவுடன் இணைவது இந்த முறை எஸ் ஜானகி.

காலையும் நீயே மாலையும் நீயே
காற்றும் நீயே கடலும் நீயே

ஆலய மணி வாய் ஓசையையும் நீயே
அருள் வடிவாகும் தெய்வமும் நீயே

பாலில் விழுந்த பழங்களை போலே
பருவம் உருவம் நிறைந்தவள் நீயே
மனதில் மேடை அமைத்தவள் நீயே
மங்கல நாடகம் ஆட வந்தாயே

சுட்டி :

இந்தப் படத்தின் இன்னும் இரு பாடல்கள் அடுத்த வாரம் வெள்ளியில்....! இதுவரை பதிவுகள்தான் தொடரும் போட்டு வந்தன. இப்போது முதல் முறையாக வெள்ளி வீடியோவும் தொடர்கிறது!!



பொருளடக்கம்

# நினைவு நல்லதும், வாக்கினிலே இனிமையும்...

1) எஸ்.பி., பெருமாள் கூறுகையில், "சாலைகளில் செல்லும் போது வாகன விபத்தில் யாருக்கேனும் காயம் ஏற்பட்டிருந்தால் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முன் வர வேண்டும். சில நேரங்களில் அதிக ரத்த இழப்பினால் கூட உயிரிழப்பு ஏற்பட்டு விடும். இதை தவிர்க்க மக்கள் மனம் இரங்கி உதவ வேண்டும், என்றார்....



2) நினைவு நல்லதும், வாக்கினிலே இனிமையும்...

"கலையரசன் நடத்துநர் என்றால் பயணிகள் அனைவருக்கும் பிடிக்கும், மாணவர்களை படியில் நிற்காமல் பார்த்துக்கொள்கிரார்,

இவரைப்போன்ற நடத்துநர்களை யாரும் பாராட்டுவதில்லை, இவரை உங்களில் எத்தனை பேருக்கு

பிடிக்கும்......" (நன்றி புதிய தகவல்கள், துரை செல்வராஜூ ஸார்)




3) இன்ஸ்பெக்டர் அங்கிருந்து புறப்படுவதற்கு முன் சகோதரியை இழந்த ராஜேஸ்வரி, விஜயலட்சுமிக்கு ஆறுதல் கூறினார். அப்போது, `அம்மா நீங்க நல்லா இருக்கணும்' என கண்ணீர்மல்க அவர்கள் கூறினர். அதைக்கேட்ட போலீஸாரின் கண்களும் கலங்கின...... (நன்றி புதிய தகவல்கள், துரை செல்வராஜூ ஸார்)



4) மேற்கு வங்க மாநிலத்தில், நோயால் அவதிப்படும் தனது தாயார் தண்ணீருக்காக நீண்ட தூரம் சென்று அவதிப்படுவதை பார்த்த **மகள்**, வீட்டிலேயே 15 அடி ஆழம் கிணறு தோண்டியுள்ளார். அவருக்கு பாராட்டு குவிந்து வருகிறது....



5) மருத்துவம் படிக்கும் மாணவர், படிப்புச் செலவுக்கும், பெற்றோருக்கு உதவி செய்வதற்காகவும், நுங்கு விற்பனை செய்கிறார். **சிவா**.




**6) கொரோனா ஊரடங்கு காரணமாக கண்ணுக்கு எட்டிய துாரம் வரை மனித நடமாட்டமே இல்லை வெறிச்சோடிக்கிடந்த சாலைகளில் தெரு நாய்கள் மட்டும் அங்கும் இங்கும் உலாத்திக்கொண்டும் அவ்வப்போது தலையை நிமிர்த்தி யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தன........ யார் அவர்? எஸ்.ராஜேஷ். சென்னையில் போக்கு வரத்து போலீஸ்காரரராக பணியாற்றுகிறார்.**



**பொருளடக்கம்**

# தீதும் நன்றும் பிறர் தர வாரா



ரமா ஸ்ரீநிவாசன்

நண்பர்களே, நீங்கள் யாவரும் பிள்ளைகளாகவும், சகோதர சகோதரிகளாகவும் வளர்ந்தீர்கள், கணவன்/மனைவிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள், தாய் தந்தையராக அவதாரம் எடுத்திருக்கின்றீர்கள், சிலர் மாமனார்/மாமியாராகவும் பட்டம் பெற்றுள்ளீர்கள், சிலர் தாத்தா/பாட்டிகளாகவும் ஆகி விட்டீர்கள். ஆனால் நாம் யாவரும் கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு.

ஆகவே, நல்ல விஷயங்கள் நம் கண்களில் சிக்கும்போது அதைப் பகிர்ந்து மற்றவருக்கும் உதவும் வகையில் கொண்டு சேர்ப்போம் என்ற எண்ணத்தில் இவ்வாரம் இக்கட்டுரையை உங்களுடன் பகிர்கின்றேன்.

இக்கட்டுரையானது எல்லா பெற்றோர்களின் கவனத்தையும் கவர்ந்தால் நான் எழுதியதின் நோக்கம் நிறைவேறும்.

ஒரு மஹா புத்திசாலியான மாணவன் சென்னை ஐ.ஐ.டி நுழைவுத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றான். அங்கு பிரமாதமாக மதிப்பெண்கள் பெற்று, கலிஃபோர்னியா பல்கலைகழகத்தின் தேர்வில் வெற்றி பெற்று எம்.பி.ஏ படிப்பிற்காக அங்கு சென்றான்.

அந்த பல்கலைகழகத்திலும் நல் மதிப்பெண்கள் பெற்று, சிறந்த நிறுவனம் ஒன்றில் மிக உயர்ந்த ஊதியத்துடன் அமெரிக்கப் பிரஜை ஆனான். திருமண வயது முதிர்ந்த்தும் ஓர் அழகிய தமிழ்ப் பெண்ணை கைப்பிடித்தான்.

காலம் ஓடியது. இருவரும் சேர்ந்து கலை வண்ணம் கொண்ட ஐந்து படுக்கையறைகள் அமைந்த வீட்டை வாங்கி, அதில் மகிழ்ச்சியுடன் தங்கள் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார்கள்.



என்னவெல்லாம் சிறு வயதில் இந்தியாவில் கனவு கண்டானோ, அவை யாவையும் அங்கே நினைவாக்கினான். தன் பெற்றோரைக் கூட்டிச் சென்று அமெரிக்காவைச் சுற்றிக் காண்பித்து சந்தோஷித்தான். அவனது பெற்றோரும் இந்தியா திரும்பி தங்கள் மகனின் புகழ் பாடிய வண்ணம் இருந்தனர்.

வெற்றியின் எல்லா அறிகுறிகளும் அந்த பையனிடத்தில் அடக்கம் என்று கூறும் அளவிற்கு மிகச் சிறப்பாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான்.

ஆயின், அந்தோ சில ஆண்டுகளுக்கு முன் அம்மனிதன் தன் மனைவியையும் குழந்தைகளையும் சுட்டு கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டான்.

இத் தகவலை கேட்ட உடனேயே மிரண்டு போனேன். இரு பெண்களை பெற்றவள் நான் என்பது ஒரு பக்கம் இருக்க அதில் பெரிய பெண் அமெரிக்காவிற்கு மேற் படிப்பிற்கு சென்றிருக்கிறாள் என்னும் புரியாத பயம் இன்னொரு பக்கம் ஓடியது.

என்னதான் தவறாகி விட்டது?

கலிஃபோர்னியா இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைகாலஜி அவனின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து கீழ்க் கண்ட பேப்பரை சமர்ப்பித்தது.

இந்நிகழ்வாய்வை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர் அந்த மனிதரின் குடும்பத்தையும் நண்பர்களையும் சந்தித்துப் பேசியதில் தெரிந்து கொண்டதென்னவென்றால் அம்மனிதர் அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தன் வேலையை இழந்து, வீட்டில் சில காலம் அமர வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார் என்பதுதான். அவர் தன் ஊதியத்தை குறைத்து மற்ற நிறுவனங்களுக்கு விண்ணப்பித்தும் பயனில்லாமல் போனது.

நண்பர்களே, *“difficulties come in a row”*. பணமில்லாததால் அவருடைய வீட்டின் இரண்டு அல்லது மூன்று மாத தவணைகள் கட்டாமல் தவறியதும், ஆசையுடன் வாங்கிய வீடு கை மாறியது. அதையும் தாண்டி

சில மாதங்கள் அவரும் அவர் குடும்பமும் எப்படியோ குறைந்த பணத்துடன் உயிர் வாழ்ந்தனர்.

பின்னர், குருட்டுத்தனமாக ஓர் வேகத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தனர். அவன் முதலில் தன் மனைவியையும் பெற்ற குழந்தைகளையும் சுட்டுக் கொன்று விட்டு தானும் துப்பாக்கியைக் கொண்டு தற்கொலை செய்து கொண்டான்.

அவனது பெற்றோர் அவனை எவ்வளவு சிரமப் பட்டு இவ்வுலகிற்குள் வரவேற்றிருப்பார்கள்; எத்தனை கஷ்டங்களையும் சுக துக்கங்களையும் தாண்டி அவனை ஆளாக்கியிருப்பார்கள்; அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தவுடன் எவ்வளவு சந்தோஷித்திருப்பார்கள்; அவனே தன் மனைவியையும் குழந்தைகளையும் எப்படி நேசித்திருப்பான் என்று யோசியுங்கள் நண்பர்களே. எல்லாமே ஒரு நொடியில் இல்லை என்றாவதற்கா? நன்றாக அசை போடுங்கள் சினேகிதர்களே. ஏனெனில் அவனுடைய முட்டாள்தனமான முடிவில் அவனுடைய பெற்றோருக்கும் பங்குண்டு.

அவன் கதையை ஆராய்ந்து தன் ஆய்வறிக்கையை வழங்கிய போது அந்த ஆராய்ச்சியாளர் அழுத்தமாக பதிவு செய்ததென்னவென்றால் அந்த அதிபுத்திசாலியான மனிதருக்கு வெற்றியை மகிழ்ச்சியுடன் எதிர் நோக்கக் கற்றுக் கொடுத்த அவனது பெற்றோர் அவனை தோல்விகளின் வலிக்கும் குழப்பத்திற்கும் தயார் செய்யவில்லை.

இப்பொழுது நாம் உண்மையான கேள்விக்கு வருவோம்.

ஆச்சரியத்திற்குரிய வெற்றி பெற்றோரின் வழக்கங்களும் பழக்கங்களும் யாவை?

முதன் முதலாக நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால் நீங்கள் யாவற்றையும் அடைந்து விட்டீர்கள் என்று நம்பினால், அவை யாவையையும் அவசியம் இழக்கும் வாய்ப்பு எப்போது வேண்டுமானாலும் உங்களை நெருங்கி வரலாம் என்பதையும் நம்புங்கள்.

ஏனெனில், அடுத்த பொருளாதார வீழ்ச்சி என்று இவ்வுலகைப் அடித்து வீழ்த்தும் என்று நாம் அறியாமல் வாழ்கிறோம்.

நல்ல வெற்றிகரமானப் பழக்கம் தோல்விகளுக்கு நம்மை செவ்வென தயார் செய்து கொள்வதேயாகும் என்று நான் அழுத்தமாக நம்புகின்றேன்.

நான் ஒவ்வொரு பெற்றோரையும் கையெடுத்து வேண்டிக் கொள்வது என்னவென்றால் உங்கள் பிள்ளைகளை வெற்றிகளுக்கு மட்டுமே தயார் செய்யாதீர்கள். தோல்விகளை எவ்வாறு எதிர் கொள்வது என்பதையும் அவசியமான அழுத்தமான வாழ்க்கைப் பாடங்களாக கற்று கொடுங்கள்.

உயர் கணக்கு மற்றும் விஞ்ஞான பாடங்கள் நம் சந்ததியினரை சிறப்பாக போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள வழி வகுப்பவை. ஆயின், வாழ்க்கை அனுபவங்கள் அவர்களின் ஒவ்வொரு பிரச்சனையையும் எதிர்கொள்ளும் சக்தியை பன்மடங்கு வளர்க்கின்றன.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு பணம் எப்படி நமக்கு வேலை செய்கின்றது என்பதை மட்டும் போதித்தால் போதாது. அதே சமயம், நாம் எப்படி பணத்தின் பின் அலையக் கூடாது என்பதையும் சேர்த்து கற்றுக் கொடுப்பது அவசியம்.

நம் குழந்தைகளின் உள் மன வேட்கையை அடையாளம் காண உதவுவோம். ஏனெனில் அவர்கள் பெறும் இந்த பி.ஏ. அல்லது பி.எஸ்.ஸி பட்டங்கள் அடுத்த பொருளாதார வீழ்ச்சியின் போது உதவுமா என்பதையே நாம் அறியோம். அதே சமயம், அடுத்த பொருளாதார வீழ்ச்சி என்று, எப்படி நம்மை மறுபடி தாக்கும் என்பதையும் அறியோம்.

இக் கொரோனா காலத்தில் வீட்டில் குடும்பத்துடன் முடங்கி கிடக்கும் நேரத்தில் உங்கள் வருங்கால சந்ததியினருக்கு வெற்றிகளின் மகிழ்ச்சிகளையும் அதே சமயம் தோல்விகளின் அழுத்தமான வலிகளைப் பற்றியும் உதாரணங்களோடு விளக்க முற்படுங்கள். கண்டிப்பாக சில முக்கியமான விஷயங்களாவது அவர்களின் காதுகளை சென்றடையும். அதே சமயம், சிரமமானதாக இருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து அவர்களுடைய மன அளவிற்கு இறங்கிச் சென்று தரமான நேரத்தை *(Quality time)* செலவிடுவோம். ஒரு குழந்தையின் மிகப் பெரிய சொத்து அவன்/அவளுடைய பெற்றோர்தான். ஆகவே, என்றுமே கம்யூனிகேஷன் சேனல்களை திறந்து வையுங்கள். உங்கள் பிள்ளைகள் எங்கிருந்தாலும் உங்களிடம் ஆலோசனை கேட்கலாம் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தினீர்களானால் அவர்கள் வாழ்க்கை வழி தவற வாய்ப்பே இல்லை.

இவ்விதத்தில் நாம் இக்கொரோனா இடர் காலத்தையும் பயனுள்ளதாக செலவிடுவோம்.

ஏனெனில் பிரியமானவர்களே,

*"Success is a lousy Teacher …………………*

Failures teach us more.''

**இப்போழுது புரிகிறதா நண்பர்களே? "தீதும் நன்றும் பிறர் தர வாரா''.**

**நாம் நம் பிள்ளைகளுக்கு தரும் நல்லொழுக்கமும் சீரான வாழ்க்கை நெறிகளும்தான் அவர்களுடன் நம் வடிவில் நல்ல பழக்கங்களாக முடிவுவரை பயணிக்கும். நாம் நல் விதைகளை வித்திட்டால் நெடும் ஆலமரமாக ஓங்கி வளர்வார்கள். எனவே, கவனத்துடன் வளர்ப்போம். நல்ல பிரஜைகளை நாட்டுக்கு அர்ப்பணிப்போம்.**

---

பொருளடக்கம்

# மின்நிலா வாசகர் விமரிசனம்

## மின்நிலா 006 பற்றி கீதா ரெங்கன் அனுப்பியுள்ள விமரிசன மின்னஞ்சல். :

**அன்பார்ந்த ஆசிரியர்களுக்கு**

**படங்கள் அட்டகாசமாக இருக்கின்றன. எபியில் வரும் படங்கள் இதில் இன்னும் பளிச்சென்று இருப்பது போல் இருக்கின்றன.**

**கூடுதலான இரு கட்டுரைகளும் சிறப்பு. சுவாசியமான நபர்கள் கட்டுரை மிக மிக நன்றாக இருக்கிறது. ஒருவர் இறந்த பிறகு அவரைப் பற்றி நெகட்டிவாகச் சொல்லுவது அநாகரீகமானது என்ற நல்ல கருத்து மற்றும் ஊரைச்சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாதுதான் என்று சொல்லி அடுத்து வரும் வரிகளையும் டிட்டோ செய்கிறேன். கதைகளில் கூட நான் என் அருகே ந்டந்த சம்பவங்களை லைட்டாகக் கூடக் கொண்டு வருவது உண்டு. ஆனால் அப்படி வருவதைக் கொஞ்சம் மாற்றித்தான் எழுதுவதுண்டு.**

**எழுது பொருள் என்று அழகாக பேனா பற்றிய விவரணம் நன்றாக இருந்தது. தவரியம்மாள். குழந்தைராஜ் என்று முடித்துவிட்டாரே தொடருமோ?**

**சில கட்டுரைகள் ஃபான்ட் ஜஸ்டிஃபை ஆகாமல் இருக்கின்றன அதை முடிந்தால் ஜஸ்டிஃபை பண்ணவும். லோகோ நன்றாக இருக்கிறது.**

**பழங்கணக்கு நீங்கள் தொடங்கிய நட்சத்திரம், ராசி....ஹிஹிஹிஹி அதைச் சொல்லமாட்டேனே! ரகசியம்.. கீதா**

பொருளடக்கம்

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

“ஹாய் அங்கிள்! ஹாய் வித்யா ஆண்ட்டி! ஆண்ட்டி நீங்க டிஃபன் செய்ய ஆரம்பிக்கு முன்னரே நான் வந்துட்டேன். இன்றைக்கு நாந்தான் ஒரு ஸ்பெஷல் டிஃபன் தயார் செய்யப்போறேன். ‘அலட்டல் அருண்’ வந்தான் என்றால், நான் இன்னும் வரவில்லை என்று சொல்லுங்க. அவன் என்னைப் பத்தி என்ன சொல்றான் என்று அவனுக்குத் தெரியாம நான் கேட்கவேண்டும்” என்று சொல்லியவாறே கிச்சனுக்குள் ஓடி மறைந்தாள் அங்கிதா.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு சமையலறையிலிருந்து பூண்டு வாசனை, மசாலா வாசனை, எண்ணெய் காயும் வாசனை எல்லாம் வரத்தொடங்கிற்று.

மேலும் பத்துநிமிடங்கள் கழித்து வேகமாக நுழைந்தான் அருண். “ ஹாய் அங்கிள். வருவதற்கு கொஞ்சம் லேட் ஆயிடுச்சு. ஹாய் ஆண்ட்டி! டிபன் ரெடி பண்ணிட்டீங்களா? எங்கே அந்த அலட்டி அங்கிதா? இன்னும் வரவில்லையா? சரி, அவள் வந்தா என்னைப் பத்தி என்ன சொல்றான்னு அவளுக்குத் தெரியாம நான் கேட்கணும். கிச்சனுக்குப் போய் ஆண்ட்டி செஞ்சு வெச்சிருக்கற டிபனை கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப் பார்க்கிறேன்” என்று சொல்லிய படி கிச்சனுக்குள் நுழைந்தவன் .... திகைத்து பின் வாங்கினான்.

அசடு வழிந்துகொண்டே வந்த இருவரையும் பார்த்து, வாய்விட்டு சிரித்தனர் ஏஜியும் வித்யாவும்!

“ ஏய் ! நான் அலட்டி அங்கிதாவா? இன்னைக்கு நான் செய்த ஸ்பெஷல் மசாலா முந்திரி பக்கோடா எல்லோருக்கும் கொடுக்கப்போறேன். ஆனால் உனக்கு மட்டும் கிடையாது!”

அருண் : “ ஆண்ட்டி! இங்கே பாருங்க இவ செய்யற அக்கிரமத்தை! உங்க கிச்சன் ஸ்டோர் ரூமை காலி செய்து எதையோ செய்வாளாம். ஆனால் எனக்குக் கொடுக்கமாட்டாளாம். நீங்களே சொல்லுங்க ஆண்ட்டி நியாயத்தை! “

வித்யா : “ அருண் - நீ வருவதற்கு முன்னால் இங்கே வந்த அங்கிதா என்ன சொன்னாள் என்றால் .....”

அங்கிதா : “ ஆண்ட்டி வேண்டாம். சொல்லாதீங்க. நான் செய்த ஸ்பெஷல் பக்கோடாவை எல்லோருமே சாப்பிடலாம்!”

வித்யா : (சிரித்துக்கொண்டே ஏ ஜியிடம்) “ சரி நீங்க ஆறாவது தகவல் சொல்லுங்க “

ஏ ஜி : “உங்கள் மனதை யாராவது காயப்படுத்திருந்தால், அவரை மன்னிப்பதற்கு உங்கள் மூளை சராசரியாக 6 முதல் 8 மாதங்கள் அவகாசம் எடுத்துக்கொள்ளுமாம்”

வித்யா : “ இதெல்லாம் சரியா வராது - நம்ம மூளை என்ன கம்பியூட்டரா, எல்லாவற்றையும் தேதிப்படி குறித்து வைத்துக்கொண்டு ஆறு மாசம் முன்னாடி நடந்தவைகளை தேர்ந்தெடுத்து erase செய்வதற்கு? “

அங்கிதா: “ ஆமாம் ஆண்ட்டி - அதோடு, மூளையே இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்! “

அருண் : “ ஆமாம் - உன் பாடு திண்டாட்டம்தான்! ஏ ஜி அங்கிள் அடுத்த பாயிண்ட் சொல்லுங்க “

ஏ ஜி : “சர்ச்சைக்குரிய விஷயங்களில் கருத்து சொல்லாமல் விடுபவர்கள், பயந்தவர்கள் இல்லையாம், புத்திசாலிகளாம்.”

மூவரும் ஒன்றும் சொல்லாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள்.

ஏ ஜி : “ சரி, நாம எல்லோருமே புத்திசாலிகள்! அடுத்த பாயிண்ட். மிக விரைவில் ஏமாற்றத்தை சந்திப்பவர்கள், யாரையுமே நம்பாதவர்கள்தானாம்.”

வித்யா : “ நான், உங்களையும், கடவுளையும் நம்புபவள். அதனால நான் ஏமாற்றத்தை சந்திக்கமாட்டேன்.”

அங்கிதா : “ நான் என் அப்பாவையும், கடவுளையும் நம்புபவள்.”

அருண் : “ தாயே என் தெய்வம்”

ஏ ஜி : “ அடுத்த தகவல் இது. முன்னாள் காதலர்கள் இருவர் நண்பர்களாக மட்டுமே இருந்தால் - ஒன்று, அவர்களுக்குள் காதல் இருக்கிறது. இல்லையேல், அவர்கள் ஒருபோதும் காதலிக்கவே இல்லை”

வித்யா : “ இது அவர்களுக்கு கல்யாணம் ஆன பிறகா அல்லது அதற்கு முன்பா?”

ஏ ஜி : “ அது பற்றி ஒன்றும் தெரியவில்லை. சிக்கலான கேள்வி. !”

அங்கிதா : “ அங்கிள் எனக்கு இன்னும் பதினெட்டு வயசு ஆகவில்லை. so, முன்னாள் இந்நாள் எல்லாம் எனக்கு இப்போதைக்கு கிடையாது.

ஏ ஜி : “ அடுத்த பாயிண்ட். இது கொஞ்சம் சங்கடமான விஷயம் - யார் அதிகம் உபதேசம் செய்கிறார்களோ, அவர்கள்தான் அதிகமான பிரச்சினைகளில் இருக்கிறார்களாம்”

வித்யா " அப்படியா! உங்களுக்கு இப்போ நிறைய பிரச்னைகள் இருக்கிறதா? "

ஏ ஜி சிரிக்கிறார்.

அருண் : " சரி முந்திரி பக்கோடா எல்லாம் தீர்ந்து போச்சு. எனக்கும் வீட்டுக்குப் போக டயம் ஆயிடுச்சு.. ஆண்ட்டி நான் வருவதற்கு முன்பு அங்கிதா என்ன சொன்னா? "

வித்யா : " ஓ - அதுவா! அங்கிதா இங்கே வந்தவுடன், ' ஆண்ட்டீ இன்றைக்கு டிஃபன் நாந்தான் செய்யப்போறேன்' என்று சொன்னாள் அவ்வளவுதான்"

அருண் " ச்சே இவ்வளவுதானா - அப்போ நான் போயிட்டு வரேன் "

அருண் சென்றதும் அங்கிதா, " தாங்க்ஸ் ஆண்ட்டி, வாங்க டிஷ் வாஷிங் செய்ய நான் உங்களுக்கு ஹெல்ப் செய்யறேன் " என்று சொல்லி வித்யாவுடன் கிச்சனுக்கு சென்றாள்.
(தொடரும்)




## Kayjee: நினைவலைகள்

கடலூரிலிருந்து பரமக்குடி போய் அங்கே நாகலிங்க வாத்தியார் ஸ்கூல் என்று வழங்கி வந்த ஆயிரம் வைசிய மஞ்சப்புத்தூர் ஆதார ஆரம்பப் பாடசாலையில் ஒரு வருடம் படித்த(!!!) நாளில் பள்ளிக்கூடத்திலும் தெருவிலும் விளையாடியதே அதிகம். பள்ளியில் நிறைய உடல் பயிற்சிகள தெருவில் விளையாட்டு. என் தெருவிளையாடல் காலத்தில் பார்த்த இருவர் பின்பு பிரபலமானவர்கள் சந்திரஹாசன், சாருஹாசன். (அப்போ தம்பி பிறக்கவில்லை!) , பாஸ்கரன்.மற்றும் பலர். ( பற்றி வேறொரு சமயம்)
பரமக்குடியிலிருந்து கடலூருக்கு வந்து St ஜோசப் school வந்து சேர்ந்த பின் தான் ஆங்கில பாடம் ஆரம்பம். வருட ஆரம்பத்தில் most talked விஷயம் எவரெஸ்ட் மீது கொடி நாட்டியவர்களைப் பற்றி தான்.
நோட்டுப் புத்தகத்தில் எழுதுவதிலும் பென்சில் போய் பேனா வந்தது. முதல் இரண்டு மாதங்களுக்கு ஸ்டீல் முனை பொருத்திய மரக்கட்டைப் பேனா மட்டுமே.
என்னதான் மூடியை இறுக்கித் திருகினாலும் சட்டையில் மை, அம்மாவிடம் வசவு என்பது தவிர்க்க முடியாதது. Parker quink, iris இப்படி எல்லாம் பாட்டிலில் அடைக்கப் பட்ட இங்க் கிடைத்தாலும், நமக்கு கரைத்த இங்க் தான். நீலம் சிவப்பு வயலட் இவற்றுடன் ப்ளூ பிளாக், கருப்பு கூட கிடைக்கும்.
ஒரு மாத்திரையைக் கரைத்தால் ஒரு அவுன்ஸ் இங்க் கிடைக்கும் சட்டையில் கொட்டிக் கொண்டது போக இரண்டு வாரங்கள் எழுதலாம்
:ஒரு மத்தில் இருப்பது போன்ற ரிட்ஜ்களுடன் முனையில் ஒரு சிறிய பந்து போன்ற அமைப்புடன் ஒரு பேனா. எனக்குத் தாத்தா கொடுத்த ஒரே தின்ன முடியாத சமாச்சாரம். முனை தேயவே தேயாது. காகிதத்தைக் கிழிக்கவும் செய்யாது.

**நாம் மட்டும் இன்னும் கொஞ்சம் நாள் முந்திப் பிறந்திருந்தால், இறகு பேனா கூட உபயோகித்திருப்போம் என்று நினைத்துக் கொள்வேன். இறகுகளை அவ்வப்போது சீவிக் கூர் செய்வதற்காக உபயோகப் படுத்தப் பட்ட கத்தி பேனாக் கத்தி ஆயிற்று என்பார் சித்தப்பா.**

**மீண்டும் நோட் புத்தகத்தில் எழுதுவது பற்றி...**

**ஆங்கிலம் எழுத இப்படி சொல்லிக்கொடுத்தார்கள்**




**Oreient longmans copy book வாங்கி அதில் தினம் ஒரு பக்கம் எழுத வேண்டும்.**

**எங்கள் பள்ளியில் paper task என்றொரு வகை வீட்டுப்பாடம் உண்டு. வெள்ளிக் கிழமை சொல்வார்கள். ஒரு பக்கம் ஆங்கிலம், ஒரு பக்கம் தமிழ், 2 அல்லது 3 கணக்கு, ஒரு வாய்ப்பாடு, கடைசியாக ஒரு சித்திரம் (சீசன் ஆக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சித்திரம் 90% மாம்பழம் அல்லது கொக்கு)**

**இந்த paper task ஒரு கலகத்தில் கொண்டு போய்விட்டது.**

**(தொடரும்)**

**பொருளடக்கம்**

# வாசிப்பு அனுபவம்: இரா. அரவிந்த்.

## ஈஸ்வரன்கள்.

"தந்தைவழி சமூகத்தோலுரிப்புப் புனைவு",

சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் பாலியல் வன்முறையைச் சித்தரித்த துர்காமாதாவிலிருந்து, தந்தைவழி சமூகத்தின் இன்னபிற அவலங்கள் அனைத்தையும் எடுத்துக்காட்ட புறப்பட்டிருக்கும் புரட்சி எழுத்தாளர்
திரு. ஜீவா அவர்களுக்கு என் உளம் கனிந்த வாழ்த்துகள்.

ஒரு குழந்தையைப் பெறுவது பெண்ணாக இருப்பினும் அதன் இருப்பு, அந்தஸ்து, சாதி, மதம் அனைத்தையும் நிர்ணயிக்கும் உரிமை தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இன்றைய சமூகச்சூழலில் வாழ வழியற்று பெண் எடுக்கும் இறுதி கட்ட விபரீத முடிவுகளுக்கும் அவளையே மீடியாக்கள் குற்றம் சாட்டும் அவலத்தை எதிர்த்து புறப்பட்டுள்ள நாயகி ஆனந்தி, ஈஸ்வரன்கள் நிறைந்த இவ்வுலகில் சந்திக்கும் உடல் மற்றும் உள ரீதியான சவால்களே இப்புதினத்தின் சுருக்கமாக கூற எண்ணினால் அதையும் கடந்த எண்ணற்ற செய்திகளும் சித்தரிப்புகளும், சித்தாந்தங்களும் நிறைந்தது இப்புதினம்.

சமூக அவலங்கள் அனைத்திற்கும் சில பெண்களின் முறை தவறிய பாலியல் வேட்கையே காரணமென சொல்லி தப்பிக்கப்பார்க்கும் எழுத்தாளர் முருகானந்தம் உள்ளிட்ட அறிவுஜீவிகளை கேள்விகேட்பதிலிருந்து பெண்களை அத்தகைய சூழலை நோக்கிச்செலுத்தும் நுகர்வுவெறி சம்மந்தமான காரணிகள், சமூகத்தில் நிலவும் பணரீதியிலான மற்றும் சாதிரீதியிலான ஏற்றத்தாழ்வுகள், பெரும்பான்மையினர் மதத்தினரைப் பாதுகாப்பதாக

முகமூடியிட்டு ஒரு குறிப்பிட்ட சாதியினரின் நலனுக்காக செயல்படும் அரசாங்கம் மற்றும் அதன் அடிவருடிகளாக செயல்படும் அமைப்புகள், அவற்றால் மூளைச்சலவை செய்யப்பட்டு உருவாகிக்கொண்டிருக்கும் மதக்காவலர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் அப்பாவிக் கொலைகாரர்கள், இத்தகைய அத்தனை அவலங்களுக்கும் முதுகெலும்பாகத் துணைநிற்கும் தங்கள் குடும்பநலனையே விரும்பும் அரசு உயர் அதிகாரிகள் என அனைத்து நடைமுறை சமூகச்சிக்கல்களையும் கண்முன் விரித்திருக்கிறது இப்பொற்புத்தகம்.

தீவிரவாதம் என்பது மதங்களில் இல்லை, அதைப் பயன்படுத்தும் மனிதர்கள் உள்ளங்களிலேயே உள்ளது என்பதற்கு ஆஸ்ரமத்தில் நடக்கும் சம்பவங்களே சாட்சி. எது எப்போது எப்படி உணர்ச்சிகரமாக டிரெண்டு ஆக்கப்பட வேண்டுமென்பதை தீர்மானிக்கும் அரசியல்வாதிகள் நடத்தும் ஊடகங்களில் சொல்லப்படும் செய்திகளில் எவ்வளவு உண்மைத்தன்மை உள்ளது என்பதற்கு சேட்டு வீட்டில் பிடிபட்ட திருட்டு டிரைவர் குமாரவேல் குறித்த செய்திகளும், குழந்தைகள் கடத்தல், என்கவுண்டர் என்று காவலர் கயவர்கள் நிகழ்த்திய நாடகமும் சிறந்த சான்றுகள்.

அனைத்து தொழில்களையும் சமூக ஏற்றத்திற்கு உதவும் ஏனிப்படிகள் என சமமாக கருதும் மனநிலை உருவாகும் நாள்தான் இவற்றிற்கெல்லாம் தீர்வாகும் என கருதும் பேராசிரியர் சாமிநாதன் அவர்களின் எண்ணற்ற சிந்தனைகள் வாசகர்களை அறிவின் வாசலை நோக்கி இட்டுச்செல்கிறது.
விவாகரத்துகள் அதிகரிக்கும் இச்சூழலில் திருமணகாலத்திலேயே தம்பதிகள் ஆராயவேண்டிய தங்கள் எதிர்ப்பார்ப்புகள், உலகமயமாக்கலால் விரிவடைந்துள்ள அவர்களின் தனிப்பட்ட வாழ்விலக்குகள், அவர்களின்

சிந்தனைகளில் உள்ள மற்றும் எதிர் காலத்தில் வரக்கூடிய வேற்றுமைகள் அனைத்தையும் பரிசீலிக்க அறிவுறுத்தும் நாயகியின் தந்தையின் சொற்கள் அனைவருக்கும் பொருந்துவதோடு இப்புத்தகத்தை தங்கள் மணநாளில் வெளியிடும் தம்பதிக்கு எந்தன் திருமண வாழ்த்துகளையும் அவர்களின் மணவாழ்வு வானுயர சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

புதினத்தில் இறுதிப்பகுதியில் வரும் கடிதம், அடக்குமுறையை பிரயோகிக்கும் சாதியமைப்பால் கட்டப்பட்டுள்ள அதிகாரவர்க்கத்திற்கு மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்ற எச்சரிக்கை மணி அடிப்பதாக உள்ளது.

உங்கள் புத்தகம் மாபெரும் வெற்றியடைவதோடு பல ஈஸ்வரன்கள் இருள் உள்ளங்களில் ஒளியேற்றும் நட்சத்திரமாக மிளிர எந்தன் வாழ்த்துகள்.
நட்புடன், இரா. அரவிந்த்.

( குறிப்பு : புத்தக விமரிசனத்தில் காணப்படும் விமரிசனக் கருத்துகள், விமரிசகருடையவை மட்டுமே. மின்நிலா ஆசிரியர் குழுவின் கருத்துகள் அல்ல.)
மின்நிலா ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

# சுய அறிமுகம்: பானுமதி வெங்கடேஸ்வரன்



## என் பிளாக்: தம்பட்டம்

சிறு வயதில் விளையாட்டுகளில் திறமை குறைவு, தவிர தோற்றுப்போவதை ஒப்புக்கொள்ள முடியாது என்றால் யார் விளையாட சேர்த்துக் கொள்வார்கள்? நல்ல வேளை புத்தகங்கள் கிடைத்தது. நிறைய படித்தேன். கல்லூரி காலத்தில் சிவசங்கரி, இந்துமதி, வாஸந்திக்குப் பிறகு நான்தான் என்று நினைத்தேன். நிறைவேறாத சில ஆசைகளில் அதுவும் ஒன்றாகிப் போனது.

எங்கள் வீட்டுக்கு அருகில் வசித்த ஒரு பெண்மணி மூலம் ப்ளாக் பற்றி அறிந்தேன். என் மகள் பிளாக் துவக்கி கொடுக்க, ஆகஸ்ட் 30, 2010 அன்று என் பிளாக் ஆகிய 'தம்பட்டம்' பிறந்தது. முதல் பதிவு 'மதராச பட்டினம்' திரைப்பட விமர்சனம். இதுவரை 399 பதிவுகள் எழுதியிருக்கிறேன். கதை, கட்டுரை, பிரயாணம், திரை விமர்சனம், நூல் விமர்சனம், சமையல்,அனுபவம் என்று கலந்து கட்டி எல்லாவற்றையும் இதில்தான் எழுதுகிறேன்.

திரு.ஜி.எம்.பி. ஐயாவை சந்திக்கும் வரை ஒரு மாதத்திற்கு ஒரு பதிவு எழுதினால் பெரிய விஷயம். என் மகள் திருமணத்திற்கு அவர் வந்திருந்த பொழுது, நாங்கள் இருவரும் பரஸ்பரம் எங்கள் பிளாக் தகவல்களை பரிமாறிக் கொண்டோம். அதன் பிறகு இரண்டு மூன்று முறை அவருடைய பதிவுகளை படித்து என் கருத்தை சொன்ன பொழுது, அதை பதிவிடச் சொன்னார். மேலும்,"நீங்கள் மற்றவர்கள் பதிவுகளை படித்து கருத்திட்டால்தான், மற்றவர்கள் உங்கள் தளத்திற்கு வருவார்கள்" என்றும் கூறினார். அவருடைய தளத்திற்கு சென்ற பொழுதுதான் எங்கள் பிளாகை முதல் முறையாக படித்தேன்.அதில் ஸ்ரீராம், சினிமா கொட்டகை அனுபவங்கள் பற்றி எழுதியிருந்த பதிவிற்குத்தான் முதல் பின்னூட்டம் அளித்தேன். பிறகு அதிலிருந்து மற்றவர்கள் பதிவுகளை படிக்க ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் என் பதிவுகளுக்கு பின்னூட்டமிட்டவர்கள் கீதா அக்கா, ஸ்ரீராம், ஜி.எம்.பி. ஐயா,மற்றும் கில்லர்ஜி முதலியோர்.

கீதா அக்காவும், ஸ்ரீராமும் என்னுடைய எல்லா பதிவுகளுக்கும் பின்னூட்டம் அளித்து வருகின்றனர். சின்மயானந்தரின் நூற்றாண்டு வருடம் என்பதைப் பற்றி எழுதிய பதிவிற்குத்தான் கோமதி அரசு முதல் முறையாக பின்னூட்டமளித்தார். மங்கையர் மலரில் வெளியான என் குறுநாவலை என் தளத்தில் வெளியிட்டேன். கீதா ரங்கன் அதற்குத்தான் முதல் முறையாக பின்னூட்டமிட்டார்.

கேட்டு வாங்கிப் போட்ட கதையில் என்னுடைய 'மாங்காய் நெக்லெஸ்', 'சீதை ராமனை மன்னித்தாள்' 'கேட்ட வரம்' போன்ற கதைகள் அதிகம் பாராட்டைப் பெற்றன. கேட்ட வரம் கதைக்கு கிருஷ்ணமூர்த்தி சார், 'பிரமாதமான கதை சொல்லும் திறன்' என்று கூறியிருந்ததும், சமீபத்தில் நான் எழுதியிருந்த 'தீமாட்டிக் கல்யாண வைபோகமே' கதையை ஜீ.வீ.சார் சாவியின்

66

வாஷிங்டனில் திருமணத்தோடு ஒப்பிட்டிருந்ததும் நெகிழ்ச்சியூட்டின.

ஸ்ரீராம்,கீதா அக்கா, அதிரா போன்றவர்கள் அடிக்கடி, 'ஷார்ட் அண்ட் ஸ்வீட்' 'அதிகப்படியாக ஒரு வார்த்தை கிடையாது', சுருக்கமாக சிக்கென்று எழுதியிருக்கிறீர்கள் என்று பாராட்டுவதை படித்த பின்புதான் எனக்கு அப்படி ஒரு திறமை இருப்பது புரிந்தது.

இதுவரை எங்கள் பிளாக் பதிவுகளில் அதிகம் பேர் பார்த்து, படித்த டாப் ஐந்து பதிவுகளில் என்னுடைய தனிக்குடித்தனம் 2017 மும் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கறது.

ஜீ.வீ.சாரின் வழிகாட்டுதலின்படி புஸ்தகா மூலம் மூன்று மின் நூல்களை வெளியிட்டுள்ளேன்.

எங்கள் பிளாக் கொடுத்த உற்சாகத்தில் **JB channel** என்ற பெயரில் 'யூ டியூப்' தொடங்கி அதில் என் சகோதரியையும் இணைத்துக் கொண்டு காணொளிகளை வழங்கி வருகிறேன். அதற்கும் எங்கள் பிளாக் மெம்பர்கள் ஆதரவளித்து உற்சாகமூட்டி வருகிறார்கள். யூ டியூபிற்கும், மற்ற தொழில் நுட்ப சந்தேகங்களுக்கும் நண்பர் திண்டுக்கல் தனபாலன் உதவுவார். கீதா ரங்கனிடமும் ஆலோசனைகள் பெறுவதுண்டு.

எங்கள் பிளாகும், அதில் எழுதுகிறவர்களும் மனதிற்கு மிகவும் நெருக்கமாகி விட்டார்கள். extended family என்றே கூறலாம். என் கணவர் மறைந்த பொழுது ஞாயிறன்று எதையும் பதிவிடாமல், இரங்கல் செய்தியை மட்டும் வெளியிட்டதும், எங்கள் பிளாக் உறுப்பினர்கள் பலரும் தனித்தனியாக என்னை தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியதும் அதை உறுதி செய்தது. அந்த சமயத்தில் வல்லி அக்கா கொடுத்த ஆறுதல் மறக்கவே முடியாது.

இப்போது கூட பாருங்கள் உங்கள் பிளாகைப் பற்றி எழுதுங்கள் என்று கேட்டிருந்தார்கள், அப்படி எழுத ஆரம்பித்து எங்கள் பிளாகில் வந்து முடிகிறது. இந்த பந்தம் இப்படியே தொடர குருநாதர் அருளட்டும் என்று வேண்டி முடிக்கிறேன். வணக்கங்களும், நன்றியும்.



**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**


**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**


KGG